
# 1976 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 18</u>

**18.01.1976** நினைவு தினத்தை சக்திசாலியான தினத்தின் ரூபத்தில் கொண்டாடுங்கள்!

**22.01.1976-1** தற்போது கடைசி நேரத்திற்கான அதிவேக முயற்சி!

**22.01.1976-2** மாற்றத்திற்கான மூல ஆதாரம் -ஒவ்வொரு விநாடியும் சேவையில் பிஸியாக இருப்பது!

**23.01.1976-1** எண்ணம், சொல் மற்றும் சொரூபத்தின் மிக உயர்ந்த மற்றும் மிகத் தூய்மையான நிலை ஆவதின் மூலம் தந்தையின் பிரத்யக்ஷம்!

**23.01.1976-2** இறுதி நிலைக்கான முயற்சி!

**24.01.1976** முயற்சி செய்வதற்கான யுக்தி -இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை! **(டீச்சர்களுடன்).**

**25.01.1976** டபுள் லைட் சொரூபம் ஆகுங்கள்!

**27.01.1976** உன்னதமான மூன்று ஈஸ்வரிய வரதானங்கள்!

**28.01.1976 ஆன்மீக நட்சத்திரங்களின் சபை (கூட்டம்)!**

**01.02.1976 ஆன்மீக ஷமா (விளக்கொளி) மற்றும் மூன்று விதமான ஆன்மீக விட்டில் பூச்சிகள்!**

**02.02.1976-1 பக்தர்கள் மற்றும் பாண்டவர்களின் வரவு செலவு கணக்கு!**

**02.02.1976-2 தந்தையின் அன்பிற்குரியவர் ஆவதின் அடையாளம் -ஃபரிஷ்தா சொரூபம் ஆவது!**

**03.02.1976 தர்மம் மற்றும் கர்மத்தின் (காரியத்தின்) இணைந்த ரூபம்!**

**06.02.1976 பாப்தாதாவின் சகயோகி -வலதுகரம் மற்றும் இடதுகரம்!**

**07.02.1976-1 அவ்யக்த பரிஷ்தாக்களின் சபை!**

**07.02.1976-2 மகாரதிகளின் ஒன்றும் புதிதல்ல என்ற நிலை மற்றும் வீணானவைகளின் கணக்கின் முடிவு!**

**08.02.1976 கனெக்ஷன் (தொடர்பு) மற்றும் கரெக்ஷனின் (சரி செய்தலின்) சமநிலை மூலம் அதிசயம்! (டீச்சர்களுடன்)**

**09.02.1976 பிந்து ரூப ஸ்திதி மூலம் பிராப்தி!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 18.01.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு தினத்தை சக்திசாலியான தினத்தின் ரூபத்தில் கொண்டாடுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து அன்பிலேயே ஐக்கியமாகியிருக்கும் குழந்தைகளைப் பார்த்து குழந்தைகளின் அன்பிற்கு மறுமொழி கொடுத்துக் கொண்டிருக்கிறார். எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக படைப்பவராக மற்றும் வரம் அளிப்பவராக ஆகுக! எப்பொழுதும் விஷ்வ கல்யாணகாரி, விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆகுக. எப்பொழுதும் மாயா, இயற்கை மற்றும் அனைத்து சூழ்நிலைகளின் மேல் வெற்றி அடைபவராக ஆகுக! இன்று பாப்தாதா அனைத்து வெற்றி அடையும் குழந்தைகளின் நெற்றியின் நடுவே வெற்றியின் திலகம் பிரகாசமாக இருப்பதாக பார்க்கிறார். அனைத்து குழந்தைகளின் கைகளில் இதே வெற்றிக் கொடியைப் பார்க்கிறார். ஒவ்வொருவரின் உள்ளத்தின் ஓசையாக வெற்றி எங்களுடைய பிறப்புரிமை ஆகும்" என்ற இந்த முழக்கம் ஒலிப்பதாக கேட்கிறோம். இன்று அமிர்தவேளையில் அனைத்து குழந்தைகளின் அன்பு மற்றும் ஆவஹானத்தின் (பாபவை அழைத்தல்) இனிமையிலும் இனிமையான பல்லவியை கேட்டுக் கொண்டிருந்தோம். பிரிந்து சென்ற துடித்துக் கொண்டிருக்கும் தூர தூரத்திலிருக்கும் கோபிகைகள் நதிக்குச் சமமாக கடலில் ஒன்றரக்கலந்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் குழந்தைகளின் அன்பின் சொரூபத்தில் ஒன்றரக்கலந்து விட்டார். ஒவ்வொருவரின் இனிமை யிலும் இனிமையான முத்து இதயத்தின் மாலையாக பாப்தாதாவின் கழுத்தை நிரப்பி விட்டது. ஒவ்வொரு வரின் விதவிதமான எண்ணம் வகை வகையான இனிமையான இசையின் ரூபத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது கூட நாலாபுறங்களிலிருந்தும் அனேக குழந்தைகள் பாப்தாதாவிற்கு நினைவின் மாலைகளை அணிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# 1976 அவ்யக்த முரளி

இன்றைய நாளை நினைவு தினத்தின் கூடவே சக்திசாலியான தினம் என்றும் கூறுகிறார்கள். இன்றைய இந்த நினைவு தினத்தில் எப்படி தொடக்கத்தில் பாப்தாதா குழந்தைகளின் தலையில் ஞானக் கலசத்தை வைத்தார், சாகார பாபா மூலமாக சக்திகளுக்கு உடல், மனம், பொருளை தானமாக உயில் எழுதிக் கொடுத்தார். அதே போலவே சாகார உடல் மூலமாக சாகார பங்கின் கடைசி நேரத்தில் சக்தி சேனைக்கு உலக நன்மை காரியத்திற்கான வில் பவரின் (ஆத்ம பலத்தின்) வில் (உயில்) கொடுத்தார். சுயம் தான் சூட்சும வதன வாசியாகி சாகாரத்தில் குழந்தைகளைப் பொறுப்பாளர் ஆக்கினார். எனவே இது சக்திசாலியான தினம் ஆகும்.

இன்று தந்தை அனைத்து குழந்தைகளின் அன்பை, சப்தத்திலிருந்து விலகி தனக்குள் நிரப்பிக் கொண்டே இருக்கிறார். இந்த நேரம் நாலாபுறங்களிலும் அனைவரின் புகார்கள் மற்றும் ஆவஹானம் செய்யும் ஓசை மிகவும் சக்திசாலியாக வந்து கொண்டிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் கேட்கிறதா? புதுப்புது குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷ ரூபத்தில் அன்பின் பிரதிபலனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எப்படி பழைய குழந்தைகளுக்கு இரட்டை இன்ஜின்களின் லி்ஃப்ட் கிடைத்தது, அதே போல் புதிய குழந்தைகளுக்கு குப்தமான (மறைவான) உதவியின், பிராப்தியின், அனுபவத்தின், குஷியின் பொக்கிஷத்தின் விசேஷ லிஃப்டை பாப்தாதா கிஃப்டாகக் கொடுக்கிறார். அவர்களுடைய அனேக புகார்களை சேவை மற்றும் எப்பொழுதும் உடன் இருப்பதின் அனுபவம் மூலமாக புகார்களை ஊக்கம் உற்சாகத்தின் ரூபத்தில் மாற்றிக் கொண்டிருக்கிறோம். எப்படி புதுக் குழந்தைகளுக்கு விசேஷமாக தந்தை மற்றும் சேவை மேல் பற்றுதல் இருக்கிறது. அதே போல் பாப்தாதாவிற்கும் புதுக் குழந்தைகள் மேல் விசேஷ சகயோகத்தின் பார்வை இருக்கிறது. தந்தையும் அந்த மாதிரி குழந்தைகளின் அதிசயக் காரியத்தை மகிமை பாடிக் கொண்டிருக்கிறார். நல்லது.

அனைத்து அன்பிற்குரிய, எப்பொழுதும் ஒரு தந்தையின் அன்பில் ஐக்கியமாகி இருக்கக்கூடிய, பாப்தாதாவை வெளிப்படுத்தக் கூடிய, அனைத்து ஆத்மாக்களிடமிருந்தும் வெற்றி அடைந்ததற்கான வெற்றி மாலையைப் பெறுவதற்கு உரியவர் ஆகியிருக்கும் குழந்தைகளுக்கு

அந்த மாதிரி வெற்றி அடையும் தந்தைக்குச் சமமான அனைத்துக் குணங்களை சாகார ரூபத்தில் பிரத்யக்ஷம் செய்யக் கூடியவர்களுக்கு, அனைத்து சித்திகளை சேவைக்காக ஈடுபடுத்துபவர்களுக்கு, அந்த மாதிரி விஷ்வ கல்யாணகாரி பாப்தாதாவிற்கும் இதய சிம்மாசனதாரியாக இருக்கும் அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தீதி அவர்களையும் மற்றக் குழந்தைகளையும் எதிரில் பார்த்து பாப்தாதா கூறினார்: இன்று குழந்தைகளின் விசேஷ சொரூபமாக என்ன இருந்தது? அன்பின் சொரூபத்தின் கூடவே புகார்களையும் கொடுத்தார்கள். எப்படி தந்தை ஞானக்கடலாக இருக்கிறார் என்றால், கடலின் விசேஷமம் என்ன? எவ்வளவு அலைகளோ அந்த அளவே அமைதியாகவும் இருக்கும் ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு விசேஷங்களும் இருக்கின்றன. அதே போலவே தந்தைக்குச் சமமாகுபவர்களிலும் வெளிப்படையாக நினைவு சொரூபம் மற்றும் உள்ளே சக்தி சொரூபம் என்ற இந்த விசேஷம் இருக்கிறது. எவ்வளவு சாகார சொரூபத்தில் நினைவு சொரூபமோ அந்த அளவே உள்ளே சக்தி சொரூபம் இருக்க வேண்டும். இரண்டிற்கும் சேர்ந்தே சமநிலை இருக்க வேண்டும். அந்த மாதிரி சமநிலை இருந்ததா? எப்படி நேரமோ மற்றும் எப்படி தினமோ அந்த மாதிரி சொரூபமும் இருக்கத்தான் செய்யும் ஆனால் இரண்டின் சமநிலையின் சொரூபம் தெளிவாகத் தென்பட வேண்டும். இது தான் ஆன்மீகத்தன்மை. தன்னுடைய பாகத்தையும் செய்து கொண்டிருக்கிறோம் ஆனால் கூடவே பார்வையாளர் என்ற மனநிலையும் இருக்கட்டும். பார்வையாளரின் மனநிலை இருப்பதினால் தன்னுடைய பாகத்தையும் மிகச் சரியாக செய்வார்கள் ஆனால் பாத்திரத்தின் சொரூபம் ஆகமாட்டார்கள் அதாவது பாத்திரத்தின் வசம் ஆக மாட்டார்கள், வில் பவர் (ஆத்ம பலம்) இருக்கும்.

என்ன விரும்புகிறீர்களோ, எந்த நேரம் விரும்புகிறீர்களோ, அந்த மாதிரி தன்னுடைய சொரூபத்தை தாரணை செய்ய முடிய வேண்டும். இதைத் தான் வில் பவர் என்று கூறுவது. அன்பு சொரூபத்திலும் சக்திசாலியான சொரூபம் சேர்ந்தே நிரம்பியிருக்க வேண்டும். அன்பில் மட்டும் சொரூபம் ஆகி விடுவது, இது லௌகீகத்தன்மை ஆகி விட்டது. அன்பு

சொரூபத்தின் கூடவே சக்திசாலியான சொரூபமும் இருப்பது தான் ஆன்மீகத் தன்மையாகும். எனவே சக்திசாலி சொரூபத்தின் கடைசி காட்சியாக பற்றுதலை வென்று நினைவு சொரூபத்தில் இருப்பது என்பதை காண்பித்திருக்கிறார்கள். இந்தக் கடைசி பரீட்சை தான் நினைவுச்சின்னத்திலும் மகிமை ரூபத்தில் இருக்கிறது. இதைத் தான் நடைமுறையில் செய்து காண்பித்திருக்கிறார் (பிரம்மாபாபா). சாகார சம்மந்தம் இருந்த உள்ளடக்கும் சக்தி மற்றும் சகித்துக் கொள்ளும் சக்தி, இந்த இரண்டு சக்திகளின் சொரூபத்தைப் பார்த்தோம். ஒரு பக்கம், அன்பை உள்ளடக்குவது, இன்னொரு பக்கம் மீதமிருக்கும் கடைசி கணக்கு வழக்கை சகித்துக் கொள்ளும் சக்தியினால் முடிப்பது. உள்ளடக்கவும், சகித்துக் கொள்ளவும் வேண்டும். இரண்டின் சொரூபத்தை செயலில் பார்த்தோம். தந்தைக்கு குழந்தைகள் மேல் அன்பு இருப்பதில்லையா? அன்பின் கடலாக இருந்தபோதிலும் அமைதியாக இருக்கிறார். தன்னுடைய உடலிலிருந்தும் விலகிய நிலை, இது தான் கடைசி நிலை ஆகும். இதை நடைமுறையில் காரியம் செய்து காண்பித்தார். இதே இரவு நேரமாகத் தான் இருந்தது இல்லையா? கடைசி பரீட்சையில் நடைமுறையில் முதல் நம்பரில் வந்தார் இல்லையா. சொரூபத்தில் கொண்டு வருவது சுலபமாக இருக்கும் ஆனால் உள்ளடக்குவது இதில் வில் பவர் வேண்டும். உள்ளடக்கும் அனைத்து பங்கையும் பார்த்தோம். கர்மத்தின் விளைவை அனுபவிப்பதிலும் உள்ளடக்குவது மற்றும் அன்பையும் உள்ளடக்குவது. இது தான் வில் பவர் ஆகும். இதே வில் பவரை கடைசியில் குழந்தைகளுக்குக் கொடுத்தார். நல்லது.

வரதானம்: ஒரு தந்தையை தன்னுடைய உலகமாக்கி எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருக்கும், பாடிக் கொண்டிருக்கும் மற்றும் பறந்து கொண்டிருக்கும் மகிழ்ச்சி நிறைந்தவர்கள் ஆகுக!

பார்வை மூலம் உலகம் மாறிவிடுகிறது என்று கூறுகிறார்கள். அப்படி உங்களுடைய ஆன்மீகப் பார்வையினால் உலகம் மாறிவிட்டது. மேலும் இப்பொழுது உங்களுக்காக தந்தை தான் உலகமாக இருக்கிறார். முந்தைய உலகம் மற்றும் இப்பொழுதைய சம்ஸ்காரத்தின் வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. முன்பு உலகத்தில் புத்தி அலைந்து கொண்டிருக்கிறது, இப்பொழுது தந்தையே உலகமாகி விட்டார்

என்றால் புத்தி அலைவது நின்று விடுகிறது. எல்லைக்கப்பாற்பட்ட பிராப்திகளை செய்விக்க கூடிய தந்தை கிடைத்து விட்டார் என்றால் வேறு என்ன வேண்டும்? எனவே சிரித்துக் கொண்டு, பாடிக் கொண்டு, பறந்து கொண்டு எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருங்கள். மாயா அழ வைத்தாலும் அழக்கூடாது.

**சுலோகன்: மனம் சுத்தமாக இருக்கிறது என்றால் விரும்பியது கிடைத்துக் கொண்டே இருக்கும். அனைத்து பிராப்திகளும் இயல்பாகவே உங்கள் எதிரில் வரும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 22.01.1976-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்போது கடைசி நேரத்திற்கான அதிவேக முயற்சி!

இன்று விசேஷமாக மிக அன்பிற்குரிய, காணாமல்போய் கண்டெடுக்கப்பட்ட, சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கும் சைத்தன்ய சாதகப் பறவைகளுக்குச் சமமான குழந்தைகளின் முகத்தைப் பார்ப்பதற்காக பாப்தாதா வந்திருக்கிறார். அந்த மாதிரி எப்பொழுதும் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும், எப்பொழுதும் இதே ஆர்வத்தில் மூழ்கியிருக்கும் குழந்தைகள் எவ்வளவு தந்தையை நினைவு செய்கிறார்களோ அந்த அளவே பாப்தாதாவும் பதிலுக்கு நினைவு செய்கிறார். அந்த மாதிரி பல மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் தந்தைக்கும் பிரியமானவர்கள் மற்றும் உலகிற்கும் பிரியமானவர்கள். எப்படி குழந்தைகள் தந்தையை ஆவாஹனம் செய்கிறார்கள் (வருக என்று அழைக்கிறார்கள்). அதே போல் உலகின் ஆத்மாக்கள், மிக உயர்ந்த ஆத்மாக்கள் உங்கள் அனைவரையும் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான ஆவாஹனத்தின் கூக்குரல் (சங்கீத ஆலாபன்) காதுகளில் கேட்கிறதா? விசேஷமாக இந்த அந்தி மாலை நேரத்தில் எப்பொழுது சூரியன் அஸ்தமிக்கிறதோ, அந்த நேரத்தில் தந்தையின் கூடவே ஞான சூரியனுடன் அதிர்ஷ்ட நட்சத்திரங்களை, இருளை அகற்றக்கூடிய ஜோதி சொரூபம் என்று நினைத்து இந்த எல்லைக்குட்பட்ட ஜோதியை நமஸ்காரம் செய்கிறார்கள். இது யாருடைய நினைவாக இருக்கிறது? தினசரி உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்களுக்கு நமஸ்காரம் செய்யப்படுகிறது என்ற அனுபவம் ஆகிறதா? ஏனென்றால் தந்தையும் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களை உலகம் மற்றும் பிரம்மாண்டத்தின் அதிபதி ஆத்மாக்களை தினசரி நமஸ்காரம் செய்கிறார். அப்படி உலகின் ஆத்மாக்களும் கூட தினசரி நமஸ்காரம் செய்வதின் நியமத்தை உருவாக்கி விட்டார்கள். அந்த மாதிரி நமஸ்காரத்திற்கு தகுதியானவராக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? அப்படியின்றி

இந்த மகிமை மற்றும் பூஜைகளோ பழைய மற்றும் நெருக்கமான குழந்தைகளினுடையது என்று நினைக்கவில்லையே?

தீவிர முயற்சி செய்து நடந்து கொள்ளும் புதுப்புது குழந்தைகள் பாப்தாதாவின் கண்களில் சஷமாக நிரம்பியிருக்கிறார்கள். எப்படி குழந்தைகளின் கண்களில் தந்தை எப்பொழுதும் நிரம்பியிருக்கிறார். எப்பொழுதும் துணையின் மற்றும் நெருக்கத்தின் அனுபவம் செய்கிறார்கள். அந்த மாதிரி தாமதமாக வந்த போதிலும் தூரத்தில் இருக்கவில்லை நெருக்கத்தில் இருக்கிறார்கள். எனவே கடைசியில் வரும் குழந்தைகளுக்கு நாடகப்படி உயரத்தாண்டுதல் மூலமாக வேகமாக அதாவது முதலில் செல்வதற் கான பொன்னான வாய்ப்பை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே முழு கவனம் வையுங்கள். பாப்தாதாவும் புதிய குழந்தைகளின் ஊக்கம், உற்சாகம் மற்றும் தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார். மேலும் கூடவே சகயோகம் மற்றும் விசேஷமாக அன்பையும் கொடுக்கிறார்.

இப்பொழுது இந்த வருடம் உலகின் ஆத்மாக்களின் அனேக விதமான இச்சைகள் அதாவது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான திட எண்ணத்தை தாரணை செய்யுங்கள். மற்றவர்களின் இச்சைகளை நிறைவேற்றுவது என்றால் தன்னை ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் உள்ளவராக ஆக்குவது. எப்படி கொடுப்பது என்றால் பெறுவது என்பதாகிறேதா, அதே போல் மற்றவர் களின் இச்சைகளை நிறைவேற்றுவது என்றால் தன்னை நிரம்பியவராக ஆக்குவது. தற்போதைய கடைசி நேரத்தின் அதிவேக முயற்சி இது தான் ஒரே நேரத்தில் இரண்டு காரியம் செய்ய வேண்டும். அது எது? மற்றவர்களுக்காக கொடுப்பது என்றால் தன்னிலும் அந்தக் குறையை நிரப்புவது, அதாவது மற்றவர்களை ஆக்குவது தான் சுயம் ஆவது ஆகும். எப்படி பக்தி மார்க்கத்தில் எந்தப் பொருளின் குறை இருக்கிறதோ அதே பொருளை தானமாக செய்கிறார்கள். அப்படி தானம் செய்வதினால் அந்தப் பொருளின் குறை ஒருபொழுதும் இருக்காது. அப்படி கொடுப்பது என்றால் பெறுவதாக ஆகி விடுகிறது. அதே போலவே எந்தப் பாடத்தில், எந்த விசேஷத்தில், எந்த குணத்தின் குறையை தன்னுள் உணருகிறீர்களோ அதே விசேஷம் மற்றும் குணத்தை தானம் செய்யுங்கள் அதாவது மற்ற ஆத்மாக்களுக்காக

## 1976 அவ்யக்த முரளி

சேவையில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் சேவையின் உடனடி பலன் மற்றும் அதனை தன்னில் அனுபவம் செய்வீர்கள். சேவை என்றால் பலன் கிடைப்பது. இப்பொழுது முதலில் தனக்காக நேரம் கொடுங்கள் மற்றும் பின்பு மற்ற ஆத்மாக்களின் சேவைக்காக நேரம் கொடுங்கள் என்ற மாதிரி முயற்சி செய்வதற்கு இவ்வளவு நேரம் இப்பொழுது இல்லை. அதிவேக முயற்சி என்றால் தனக்கும் றும் மற்ற ஆத்மாக் களுக்கும் சேர்ந்தே சேவை இருக்கட்டும். ஒவ்வொரு விநாடி மற்றும் ஒவ்வொரு எண்ணத்தில் தன்னுடைய நன்மையின் மற்றும் உலக நன்மைக்கான பாவனை சேர்ந்தே இருக்கட்டும். ஒரே விநாடியில் இரண்டு காரியம் நடக்கட்டும். அப்பொழுது தான் இரட்டை கிரீடம் அணிந்தவராக ஆவீர்கள். ஒருவேளை ஒரு நேரத்தில் ஒரு காரியம் மட்டும் செய்வீர்கள் என்றால் தன்னுடைய மற்றும் உலகின் ஒரே நேரத்தில் ஒரே காரியத்தின் பிராப்தியாக புது உலகில் ஒரு ஒளியின் கிரீடம் அதாவது தூய்மையான வாழ்க்கை, சுகம் செல்வங்கள் நிரம்பிய வாழ்க்கை கிடைக்கும் ஆனால் இராஜ்யத்தின் ஆசனம் மற்றும் கிரீடம் பிராப்தி ஆகாது அதாவது பிரஜை பதவிக்கான பிராப்தி இருக்கும், அப்படி இரட்டை கிரீடம் பிராப்தி செய்வதற்கான ஆதாரம் ஒவ்வொரு நேரமும் தனக்கும் மற்றும் மற்ற ஆத்மாக்களுக்கும் இரட்டை சேவை செய்யுங்கள். இது தான் கடைசியில் வந்தும் அதிவேகமாகச் செல்லும் முயற்சி ஆகும். அந்த மாதிரி அதிவேகமான முயற்சி செய்கிறீர்களா? அந்த மாதிரி சோதனையை விசேஷ ரூபத்தில் தற்சமயம் செய்யுங்கள். இந்த சாதனம் மூலமாகத் தான் தன்னுடைய மற்றும் நேரத்தின் மாற்றத்தை செய்வீர்கள். நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் நம்பிக்கைக்குரிய, தன்னை மற்றும் உலகை மாற்றம் செய்யக்கூடிய பாப்தாதாவிற்குச் சமமாக எப்பொழுதும் உலக நன்மைக்கான சுப பாவனையில் இருக்கக்கூடிய அனைத்து ஆத்மாக்களின் அனைத்து விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய தீவிர முயற்சியாளர், நேரம் மற்றும் எண்ணத்தை சேவையில் ஈடுபடுத்தக்கூடிய உலக சேவாதாரி, உலகிற்கு நன்மை செய்பவர், அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.01.1976-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாற்றத்திற்கான மூல ஆதாரம் -ஒவ்வொரு விநாடியும் சேவையில் பிஸியாக இருப்பது!

மஹாரதிகளின் ஆன்மீக உரையாடலில் விசேஷமாக என்ன ஆன்மீக உரையாடல் நடக்கிறது? மஹாரதிகளின் ஆன்மீக உரையாடலில் அதிகப்பட்சமாக நேரத்திற்கு தகுந்தாற்போல் மாற்றம் எப்படி ஏற்பட வேண்டும் என்ற இந்த விஷயம் தான் இருக்கிறது. நேரம் மற்றும் தன்னைப் பார்த்து என்னவாகும்? என்ற கேள்வி எழுகிறது ஆனால் மாற்றத்திற்கான மூல ஆதாரம் ஒவ்வொரு விநாடியும் சேவையில் பிஸியாக இருப்பது. எந்த நேரமாக இருந்தாலும் அதை சேவைக்காகத் தான் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மஹாரதிகளின் மனதில் எப்பொழுதும் இருக்கட்டும். தன்னுடைய உடல், உடலின் அவசியமான காரியத்திலும் நேரத்தை கொடுக்கிறீர்கள் என்றாலும் தனக்காக செலவழித்துக் கொண்டே மனதால் உலக நன்மையின் சேவையை சேர்த்தே செய்ய வேண்டும். ஒருவேளை வாய்மொழி மற்றும் காரியத்தில் செய்ய முடியவில்லை என்றால் மனதில் நன்மை பயக்கும் பாவனையின் எண்ணம் இருக்கிறது என்றாலும் அதுவும் சேவையின் பாடத்தில் சேமிப்பாகி விடும். பக்தி மார்க்கத்தில் பெரிய வள்ளல் என்று யாரைக் கூறுவார்கள். யார் தனக்காக இன்றி ஒவ்வொரு பொருளையும், ஒவ்வொரு நேரத்தையும் மற்றவர்களுக்கு தானம், புண்ணியம் செய்வதற்கு ஈடுபடுத்துகிறாரோ அவர் தான் பெரிய வள்ளல் என்று கூறப்படுகிறார். இல்லை என்றால் வள்ளல் என்று கூறப்படுகிறார். யார் அழியாத தானம் செய்து கொண்டே இருக்கிறாரோ, யார் எப்பொழுதும் தானம் செய்து கொண்டே இருக்கிறார் என்றால் அவரை பெரும் வள்ளல் என்று கூறுவது. அதே போலவே தனக்காக நேரத்தைக் கொடுத்துக் கொண்டே நான் உலக சேவையில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்ள வேண்டும். எப்படி மேடையில் எப்பொழுது அமர்கிறார்களோ

அப்பொழுது நான் இந்த நேரம் சேவையின் மேடையில் இருக்கிறேன் என்ற முழு நேரமும் விசேஷ கவனம் இருக்கும். மெத்தனம் இருக்காது. சேவையில் முழு கவனம் இருக்கும். அதே போலவே தன்னை சேவையின் மேடையில் இருப்பதாக எப்பொழுதும் புரிந்து கொள்ளுங்கள். இதன் மூலமாகத் தான் மாற்றம் ஏற்படும். தன்னில் என்னென்ன பலஹீனங்கள் அனுபவம் ஆகிறதோ அவை அனைத்தும் இந்த சேவைக் காரியத்தில் நிரந்தரமாக இருப்பதினால் சேவையின் பலன் சொரூபமாக மற்ற ஆத்மாக்களின் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதத்தின் பிராப்தி மற்றும் குணமகிமை ஏற்படுகிறது. அதன் பிராப்தியின் ஆதாரத்தினால் குஷி இருக்கிறது. மேலும் அதன் ஆதாரத்தினால் இன்னும் பிஸியாக இருப்பதினால் அந்தக் குறை முடிவடைந்து விடும். அப்படி பரிவர்த்தனை ஆவதற்கான சாதனம் இது தான். இதைத் தான் ஒருவர் இன்னொருவரின் கவனத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்காக ஈர்க்கிறார்கள். அப்படி நினைவு யாத்திரையில் நிலைத்திருப்பது இதுவும் தற்சமயம் உலக நன்மை செய்பவரின் நிலைக்கேற்றபடி சேவையில் சேமிப்பாகி விடும். ஏனென்றால் இப்பொழுது மகாரதிகளுக்கு நினைவு யாத்திரையை தனக்காக மட்டுமின்றி அனைவரின் நன்மை மற்றும் அனைவரின் சேவைக்காக இருக்க வேண்டும். சுயம் அனுபவம் செய்வதற்கான நேரமோ மிக அதிகமாக கிடைத்தது, ஆனால் இப்பொழுது மகாதானி மற்றும் வரதானியின் நிலையாகும். மகாரதியின் பரிபாஷையாக என்ன இருந்தது? மகாரதி என்றால் இரட்டை கிரீடம் அணிந்தவர். அதாவது இரட்டை சேவாதாரி. தனதின் மற்றும் அனைவரின் சேவையின் சமநிலை இருக்கட்டும். அவரைத் தான் மகாரதி என்று கூறுவோம். குழந்தைகளுக்கு குழந்தைப்பருவத்தின் நேரம் தனக்காக இருக்கும் மற்றும் பொறுப்புள்ள ஆத்மாக்களின் நேரம் சேவைக்காக இருக்கும். அப்படி குதிரைப்படை மற்றும் காலாட்படையினரின் நேரம் தனக்காக அதிகமாக செல்லும். அவர்களே சில நேரம் நன்றாக தாரணை செய்வார்கள், சில நேரம் தாரணையில் தோல்வி அடைந்து கொண்டே இருப்பார்கள். சில நேரம் தீவிரமான முயற்சியில், சில நேரம் சாதாரண முயற்சியில் இருப்பார்கள். இந்த நேரம் இந்த சம்ஸ்காரத்தோடு யுத்தம் என்றால், அடுத்த நேரம் அடுத்த சம்ஸ்காரத்தோடு யுத்தம் இருக்கும். அவர்கள் தனக்காக அதிகமான நேரத்தை இழப்பார்கள் ஆனால் மகாரதி அந்த மாதிரி செய்ய மாட்டார்கள். எப்படி குழந்தைகள்

பொம்மைகளுடன் விளையாடவும் செய்வார்கள், உருவாக்கவும் செய்வார்கள், பின்பு உடைத்தும் விடுவார்கள். இதுவும் தன்னுடைய சம்ஸ்காரம் என்ற பொம்மையோடு சில நேரம் விளையாடுவது, சில நேரம் உடைத்துப் போடுவது, சில நேரம் உருவாக்குவது, சில நேரம் வசமாகி விடுகிறார்கள் மற்றும் சில நேரம் அதை வசமாக்கி விடுகிறார்கள் ஆனால் இது குழந்தைப் பருவத்தின் அடையாளம் ஆகும், மகாரதியினுடையது அல்ல. நல்லது.

வரதானம்: பிராமண வாழ்க்கையில் குஷியின் வரதானத்தை எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்ளக்கூடிய மகான் ஆத்மா ஆகுக!

பிராமண வாழ்க்கையில் குஷி தான் பிறப்புரிமை ஆகும். எப்பொழுதும் குஷியாக இருப்பது தான் மகான் நிலையாகும். யார் இந்த குஷியின் வரதானத்தை நிரந்தரமாக தக்க வைத்துக் கொள்கிறார்களோ அவர்கள் தான் மகான் ஆவார்கள். எனவே குஷியை ஒருபொழுதும் இழக்கக்கூடாது. பிரச்சனைகளோ வரும் மற்றும் செல்லும் ஆனால் குஷி செல்லக்கூடாது ஏனென்றால் பிரச்சனை வெளியிலிருந்து வந்தது. மற்றவர்களின் தரப்பிலிருந்து வந்தது, அதுவோ வரும், போகும். குஷி நம்முடையதாகும், தன்னுடையதை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வார்கள். எனவே உடலே சென்று விட்டாலும் கூட குஷி செல்லக்கூடாது. குஷியோடு உடலும் சென்று விட்டது என்றால் மிகவும் நல்லது. மேலும் புதியது கிடைத்து விடும்.

சுலோகன்: பாப்தாதாவின் உள்ளப்பூர்வமான பாராட்டுக்களை பெற வேண்டும் என்றால் அனேக விஷயங்களைப் பார்க்காமல் (தேவையற்ற) களைப்பற்று சேவையில் நிலைத்திருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 23.01.1976-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ணம், சொல் மற்றும் சொரூபத்தின் மிக உயர்ந்த மற்றும் மிகத் தூய்மையான நிலை ஆவதின் மூலம் தந்தையின் பிரத்யக்ஷம்!

தன்னை ஹையஸ்ட் (மிக உயர்ந்தவர்) மற்றும் ஹோலியஸ்ட் (மிகத் தூய்மையானவர்) என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை செய்து கொண்டே இருக்கிறீர்களா? ஹையஸ்ட் என்றால் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணன். பிராமணர்களுக்கு விராட ரூபத்தில் குடுமியின் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி ஸ்தானம் உயர்ந்த குடுமியினுடையதாக இருக்கிறதோ அதே போல் ஸ்தானத்தின் கூடவே ஸ்திதியும் (மனநிலையும்) உயர்ந்ததாக இருக்கிறதா? எப்படி உயர்ந்த பெயரோ, அதே போலவே உயர்ந்த மரியாதை மற்றும் அதே போலவே உயர்ந்த காரியம். எப்படி தந்தைக்காக உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் என்று மகிமை இருக்கிறது. அதே போல் குழந்தைகளுக்கும் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணன் என்ற மகிமை இருக்கிறது. இந்த உயர்ந்த நிலையின் நினைவுச்சின்னம் இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஏதாவது உயர்ந்த காரியம் மற்றும் நல்ல காரியங்களைச் செய்கிறார்கள் என்றால் ஜாதி பிராமணர்களின் மூலமாகத் தான் செய்விப்பார்கள். இந்த நேரத்தின் உயர்ந்த காரியத்தின் நினைவுச் சின்னமாக இப்பொழுது கூட சைத்தன்ய உண்மையான பிராமணனின் ரூபத்தில் பார்த்துக் கொண்டும் மற்றும் கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். உயர்ந்த காரியத்தின் மகிமையையும் மற்றும் வர்ணனையையும் கேட்கிறீர்கள், இன்னொரு பக்கம் நீங்களே உயர்ந்த பங்கையும் செய்து கொண்டிருக்கிறீர்கள். நினைவுச்சின்னம் மற்றும் நடைமுறை இரண்டையும் சேர்த்தே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நினைவுச்சின்னம் மூலமாகவும் எவ்வளவு

உயர்ந்தவர்களாக இருந்தார்கள் என்று நிரூபணம் ஆகிறது. மேலும் இப்பொழுது இருக்கிறார்கள் மற்றும் பின்பும் இருப்பார்கள். எப்படி பிராமணர்கள் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதே போலவே மணர்களின் காலமும் அனைத்து யுகங்களையும் விட மிக உயர்ந்த யுகம் அதாவது சங்கமயுகத்தின் காலம் அதாவது அமிர்தவேளை மற்றும் பிரம்ம முகூர்த்தத்தின் காலம் ஆகும். பிராமணர்களுடைய இந்த மிக உயர்ந்த நிலை ஏன் உருவானது? ஏனென்றால் பிராமணர்கள் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த மற்றும் உயர்ந்த காரியத்தில் சகயோகி ஆவதற்கான உயர்ந்த பாக்கியத்தை பிராப்தி செய்கிறார்கள். நமக்கு இவ்வளவு உயர்ந்த பங்கு, சிரேஷ்ட ஸ்தானம் மற்றும் மிக உயர்ந்த மரியாதை இருக்கிறது என்பது நினைவில் இருக்கிறதா? இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தை முழுக் கல்பத்தில் பிறகு ஒருபோதும் பிராப்தி செய்ய முடியாது. அப்படி ஹைஹஸ்ட் மற்றும் கூடவே ஹோலியஸ்ட்டின் நினைவுச் சின்னத்தை இப்பொழுது வரை கேட்கிறீர்கள், மனிதர்கள் பிராமணர்களுக்குப் பதிலாக உங்களுடைய தேவதா ரூபத்தை மகிமை செய்கிறார்கள்.

ஹோலியஸ்டிற்கு என்ன வர்ணனை இருக்கிறது? தாமரைக்குச் சமமான கண்கள், தாமரைக்குச் சமமான கைகள், தாமரைக்குச் சமமான வாயின் ரூபத்தில் இன்று வரையிலும் வர்ணனை செய்து கொண்டே இருக்கிறார்கள். இப்பொழுது ஒவ்வொரு கர்ம இந்திரியங்களும் தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பதாக ஆகி விட்டதா என்று சோதனை செய்யுங்கள், எப்படி தாமரை மலர், உறவு நெருக்கத்தில் வந்தும் விலகி இருக்கிறது, அதே போல் உடல் மற்றும் உடலின் சம்மந்தத்திலிருந்து, உடலின் இந்த பழைய உலகத்தின் ஈர்ப்பிலிருந்து விலகியிருக்கிறீர்களா? பார்ப்பது, கேட்பது, பேசுவது போன்ற ஏதாவது கர்ம இந்திரிய ரசனை தன்னுடைய வசமாகவோ ஆக்கி விடவில்லையே? வசமாகி விடுவதின் அர்த்தம் ஹோலியஸ்ட்டிலிருந்து பூதம் ஆகி விடுவது. எப்பொழுது பூதம் ஆகி விடுகிறார்கள் என்றால் பூதங்களின் காரியமே துக்கமாவது மற்றும் துக்கப்படுத்துவது. அவர்கள் பின்பு ஹைஹஸ்ட் பிராமணனிலிருந்து சூத்திரன் ஆகி விடுகிறார்கள். எனவே நான் ஹைஹஸ்ட் மற்றும் ஹோலியஸ்ட் ஆக இருக்கிறேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுது இது பிரத்யக்ஷ ரூபத்தில்

அதாவது எண்ணம் மற்றும் சொரூபத்தில் நினைவு இருக்குமோ அப்பொழுது தான் பிரத்யக்ஷ வருடத்தைக் கொண்டாட முடியும். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்காக எதுவரை சுயம் சொரூபத்தில் ஹோலியஸ்ட் மற்றும் ஹையஸ்ட் ஆகவில்லை என்றால் தந்தையை எப்படி பிரத்யக்ஷம் செய்வீர்கள்? தன்னில் தந்தைக்குச் சமமான குணம் மற்றும் காரியத்தை வெளிப்படுத்துவது தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதாகும். உயர்ந்த காரியத்தினால் உயர்ந்த தந்தையின் பெயர் புகழடையும். தன்னுடைய ஆன்மீக முகத்தினால் ஆன்மீகத் தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்த) செய்ய வேண்டும். அதனால் ஒவ்வொரு ஆத்மாவும் ஒவ்வொரு பிராமணரிடமும் பிரம்மாபாபாவைப் பார்க்க வேண்டும். படைப்பு (குழந்தை) தன்னுடைய படைப்பவரை (தந்தையை) காண்பிக்க வேண்டும். ஒவ்வொருவரின் வாயிலிருந்து சுயம் பகவான் இவர்களை இவ்வளவு அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாக ஆக்கியிருக்கிறார் என்ற ஒரே வார்த்தை தான் வெளியாக வேண்டும். ஒவ்வொருவரின் அதிர்ஷ்டம் பாப்தாதாவின் உருவத்தை பிரசித்தி ஆக்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னை அந்த மாதிரி தெய்வீக சுத்தமான கண்ணாடியாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு கண்ணாடி மூலமாக அனேகர்களுக்கு பாப்தாதாவின் சாட்சாத்காரம் ஏற்பட வேண்டும். சாட்சாத் தந்தைக்குச் சமமான நிலை தான் தந்தையை சாட்சாத்காரம் செய்விக்கும்.

பிரத்யக்ஷ வருடத்தை கொண்டாடுவதின் அர்த்தம் தன்னை தந்தைக்குச் சமமாக ஆக்குவது. இந்த ஸ்தூல சாதனமோ, காரிய தேவைக்கான சாதனம் மட்டும் தான். சதா காலத்தின் சாதனம் சித்தி சொரூபத்தினுடையது. சித்தி சொரூபம் தான் அந்த மாதிரி உயர்ந்தவர்களாக ஆக்குபவர், உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் தான் என்று தானாகவே நிரூபணம் செய்யும். எனவே சாதனங்களின் கூடவே சித்தி சொரூபத்தையும் கடைப்பிடியுங்கள். எண்ணம், சொல் மற்றும் சொரூபம் மூன்றுமே ஹோலியஸ்ட் மற்றும் ஹையஸ்ட் ஆக இருக்கட்டும். அந்த மாதிரி நிலை மூலம் தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்ய முடியும். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம், உற்சாகம், உயர்ந்த எண்ணம், உழைப்பு மற்றும் ஆர்வத்தைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைகிறார் ஆனால் வருங்காலத்திற்காக சகயோகம் கொடுப்பதற்காக திட்டத்தைக் கூறிக் கொண்டிருக்கிறார். அனைவருக்கும் ஒரே ஒரு

எண்ணம் தான் ஒரு எண்ணத்தில் மகான் சக்தி இருக்கிறது. ஒரே சீரான நிலையில் நிலைத்திருந்து இந்த எண்ணத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு கல்பத்தின் வெற்றியின் அதிர்ஷ்டத்தின் ஓவியமோ இப்பொழுது கூட மகிமை செய்யப்படுகிறது மற்றும் நிலைத்திருக்கிறது. நல்லது.

அந்த மாதிரி தன்னுடைய அதிர்ஷ்டம் மூலமாக பாப்தாதாவின் உருவத்தை காண்பிக்கக்கூடிய, எப்பொழுதும் தாமரைக்குச் சமமாக, அற்ப காலத்து ஈர்ப்பிலிருந்து விலகியிருக்கக்கூடிய, தந்தைக்குச் சமமான ஹோலியஸ்ட் மற்றும் ஹையஸ்ட் சுயகௌரவத்தில் நிலைத்திருக்கக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவில் தந்தையின் அன்பை சொரூபத்தை மற்றும் சம்மந்தத்தை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய, மிக உயர்ந்த, உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமணர்களுக்கு, உயர்ந்ததிலும் உயர்ந்த பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳ ✳✳✳✳✳✳✳✳

# 23.01.1976-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இறுதி நிலைக்கான முயற்சி!

பிரத்யக்ஷ வருடத்தைக் கொண்டாடுவதற்காக அனைவரும் பாப்தாதாவை செய்தித்தாள்கள் மற்றும் அழைப்பிதழ்கள் மூலமாக பிரத்யக்ஷம் செய்வதற்கான முயற்சி செய்திருக்கிறீர்கள். இதுவும் சேவைக்கான அவசியமான சாதனம் ஆகும் ஆனால் இந்த செய்தித் தாள்கள் மற்றும் அழைப்பிதழ்கள் ஆகியவையோ அன்று பார்த்தார்கள், படித்தார்கள் மற்றும் கேட்டார்கள். பிறகு நினைவில் அடங்கி விடுகிறது. அகன்று விட்டது என்றோ கூற மாட்டோம், ஏனென்றால் சரியான நேரத்தில் இந்த நினைவு எது இப்பொழுது அடங்கி விட்டதோ அது சொரூபத்தில் வரும். எனவே அகன்று விட்டது என்று கூறமாட்டோம், ஆனால் அடங்கி விட்டது என்று கூறுவோம். இதன் மூலம் கூட நிலத்தில் கொஞ்சம் அன்பின் மற்றும் அறிமுகத்தின் நீர் விழுந்தது ஆனால் இந்த விதை மூலம் பிரத்யக்ஷதாவின் பழம் எப்படி உருவாகும்? தண்ணீரோ விட்டீர்கள், எதற்காக விட்டீர்கள்? பழம் பெறுவதற்காக, அந்தப் பழம் எப்படி உருவாகும்? அதாவது எண்ணம் நடைமுறை சொரூபத்தில் எப்படி வரும்? இதற்காக அழைப்பிதழையோ எப்பொழுதும் அச்சடித்துக் கொண்டே இருக்க மாட்டீர்களே? இன்றைய நாட்களில் பெரும்பான்மையான ஆத்மாக்களின் இச்சையாக என்ன இருக்கிறது? (சுகம், சாந்தியின் பிராப்தி வேண்டும் என்று). சுகம், சாந்தியின் பிராப்திக்கான இச்சையோ இருக்கிறது ஆனால் விசேஷமாக பக்த ஆத்மாக்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுடைய இச்சை என்னவாக இருக்கிறது? பெரும்பான்மையான பக்தர்களின் இச்சையாக ஒரு விநாடியாவது ஒளியைப் பார்ப்பதற்கான இச்சை இருக்கிறது என்றால் அந்த இச்சை எப்படி நிறைவேறும்? அந்த இச்சையை நிறைவேற்றுவதற்கான சாதனம் பிராமணர்களின் கண்கள் ஆகும். இந்தக் கண்கள் மூலமாக தந்தையின் ஜோதி சொரூபத்தின் சாட்சாத்காரம் கிடைக்கட்டும். இந்தக் கண்கள் கண்களாகத் தென்படாமல் பிரகாசமான லைட்டின் உருண்டையாகத் தென்படட்டும்.

எப்படி ஆகாயத்தில் பிரகாசமாக இருக்கும் நட்சத்திரங்கள் தென்படு கின்றன. அதே போல் இந்த கண்களின் மணிகள் நட்சத்திரங்களுக்குச் சமமாக பிரகாசித்துக் கொண்டிருப் பதாகத் தென்படட்டும் ஆனால் எப்பொழுது சுயம் லைட் சொரூபத்தில் நிலைத்திருப்பீர்களோ அப்பொழுது தான் அது தென்படும். காரியம் செய்வதிலும் லைட் அதாவது லேசான நிலை மற்றும் சொரூபத்திலும் லைட், மனநிலையும் லைட் ஆக இருக்கட்டும். எப்பொழுது அந்த மாதிரியான முயற்சி, நிலை மற்றும் நினைவு சொரூபம் விசேஷ ஆத்மாக்களுக்கு இருக்கிறது என்றால் விசேஷ ஆத்மாக்களைப் பார்த்து அனைத்து முயற்சி செய்பவர்களுக்கும் இதே முயற்சி இருக்கும். அடிக்கடி காரியம் செய்து கொண்டே செய்யும் காரியத்தில் லைட் மற்றும் லேசான நிலை இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். செய்யும் காரியத்தின் சுமையோ இல்லையே? காரியத்தின் சுமை தன் பக்கம் ஈர்க்கும். ஒருவேளை காரியத்தில் சுமை இல்லை என்றால் தன் பக்கம் ஈர்க்காது. மாறாக கர்ம யோகத்தில் மாறி விடும். அப்படி பிரத்யக்ஷ வருடத்தைக் கொண்டாடுவதற்கான சொரூபம் மற்றும் சாதனம் இது தான் என்று அனைவரின் புத்தியில் இருக்கிறது தான் இல்லையா? அந்த மாதிரி திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்படி சாகார பாபாவை பார்த்திருக்கிறீர்கள். எவ்வளவு தான் அதிகமாக காரியத்தில் வருவது, ரமணீகரத்தில் வருவது, உறவு மற்றும் நெருக்கத்தில் வருவது, அந்த அளவே இந்த நேரம் உறவு நெருக்கத்தில் வந்தும் விலகியிருப்பவராக ஆகி விடுவது. எப்படி உறவு மற்றும் காரியத்தில் வருவது சுலமாக இருக்கிறது, அதே போலவே விலகியிருப்பவராக ஆவதும் சுலபம் என்று அந்த மாதிரி பயிற்சி வேண்டும். இந்த நேரம் மிக அதிக அளவு, அடுத்த நேரம் முடிவு. இது தான் கடைசி வருடத்தின் மற்றும் கடைசி நிலைக்கான முயற்சி ஆகும். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள். இந்த ஒத்திகையை செய்யுங்கள் மற்றும் மிக அதிக மற்றும் முடிவின் டிரில் (பயிற்சி) செய்யுங்கள். இந்த நேரம் மிக அதிக சம்மந்தத்தில் மற்றும் அடுத்த நேரம் எவ்வளவு நெருக்கமோ அந்த அளவு விலகியிருப்பவராக ஆவது. லைட் ஹவுசில் அடங்கிப் போவது அந்த மாதிரி இருக்க வேண்டும். லைட் ஹவுஸ் என்றால் தன்னுடைய ஒளிமயமான தேசமாகும். இந்த நேரம் கர்ம சேத்திரத்தில், அடுத்த நேரம் பரந்தாமத்தில் என்று அப்படியிருக்க வேண்டும். நல்லது.

**துக்கம் மற்றும் அவதூறு வார்த்தைகளை கேட்பதிலும் நன்மை இருக்கிறது (மாதர்களுடன்):** பாப்தாதாவிற்கு மாதர்கள் மேல் தொடக்கத்திலிருந்து விசேஷ அன்பு இருக்கிறது. யக்ஞத்தின் ஸ்தாபனையிலும் விசேஷமாக யாருடைய பங்கு இருந்தது, பொறுப்பாளர்களாக யார் ஆனார்கள்? மேலும் இறுதியிலும் பிரத்யக்ஷம் மற்றும் வெற்றியின் முரசைக் கொட்டுவதில் யார் பொறுப்பாளர் ஆவார்கள்? மாதர்கள். சங்கமயுகத்தில் கோபிகைகளுக்கு விசேஷமான பங்கு இருக்கிறது. கோபி வல்லப் என்று மகிமையும் செய்யப்பட்டிருக்கிறது. உயர்ந்தவராக இருப்பவர் தன்னை தன்னுடையவளாக ஆக்க வேண்டும், நல்ல வரன் கிடைக்க வேண்டும். நல்ல வீடு கிடைக்க வேண்டும் என்ற ஆசையை மாதர்கள் எப்பொழுதும் வைக்கிறார்கள். இந்த நன்மையே பயக்கும் யுகத்தில் ஏதாவது சூழ்நிலை வருகிறது என்றால் அந்த சூழ்நிலையை பார்க்காமல் நிகழ்காலத்தைப் பார்க்காமல், நிகழ்காலத்தில் எதிர்காலத்தைப் பாருங்கள். உதாரணமாக யாராவது துக்கம் கொடுக்கிறார் மற்றும் தீய வார்த்தைகள் கூறுகிறார் என்றால், அதிலேயும் எனக்கு நன்மை இருக்கிறது என்று பாருங்கள். அந்த துக்கம் மற்றும் தீய வார்த்தைகள் தான் சுக வள்ளலின் நினைவின் அருகில் கொண்டு வரும். இது தான் அதில் அடங்கியிருக்கும் நன்மை ஆகும். வெளிமுகமாக பார்க்காமல் நன்மை தரும் ரூபத்தில் பார்த்தீர்கள் என்றால் எந்தவொரு சூழ்நிலையும் கடினமான சூழ்நிலையாக தென்படாது. இதன் மூலம் தன்னுடைய முன்னேற்றத்தை செய்ய முடியும், நல்லது.

**வரதானம்: தன்னுடைய சூட்சும சக்திகளை ஸ்தாபனையின் காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக !**

எப்படி உங்களுடைய படைப்பாகிய அறிவியலை சேர்ந்தவர்கள், விஸ்தாரத்தை சாரத்தில் உள்ளடக்கி விடுகிறார்கள். மிக சூட்சும மற்றும் சக்திசாலியான சாதனங்களை வினாஷத்திற்காக தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் நீங்கள் மாஸ்டர் படைப்பவர் ஆகி தன்னுடைய சூட்சும சக்திகளை ஸ்தாபனையின் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். உங்களிடம் அனைத்தையும் விட மகான் சக்தியாக, உயர்ந்த எண்ணத்தின் சக்தி, நல்ல உள்உணர்வின் சக்தி, அன்பு மற்றும் சகயோகத்தின் திருஷ்டி இருக்கிறது. இந்த சூட்சும சக்திகளின் மூலமாக

தன்னுடைய வம்சாவளிகளின் ஆசைகளின் தீபத்தை ஏற்றி அவர்களை யதார்த்த இலக்கு வரை சென்றடையச் செய்யுங்கள்.

சுலோகன்: எங்கு தூய்மை மற்றும் இனிமை இருக்கிறதோ அங்கு சேவையில் வெற்றி இருக்கிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.01.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சி செய்வதற்கான யுக்தி -இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை! (டீச்சர்களுடன்).

டீச்சர்கள் எப்படி விசேஷமாக சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறார்கள். அதே போல் முயற்சியும் நடந்து கொண்டிருக்கிறதா அல்லது எப்படி மாணவர்களின் முயற்சி நடந்து கொண்டிருக்கிறதோ அதே போலவே நடக்கிறதா? தன்னுடைய பங்கிற்கு ஏற்றபடி விசேஷமாக என்ன முயற்சி நடந்து கொண்டிருக்கிறது? சம்பூர்ணம் ஆக வேண்டும், சதோபிரதானம் ஆக வேண்டும் - இதுவோ அனைவரின் லட்சியம் ஆகும், இதுவோ பொதுவானதாக ஆகிவிட்டது, ஆனால் டீச்சர்களின் விசேஷ முயற்சியாக என்ன நடந்து கொண்டிருக்கிறது? தற்சமயம் விசேஷமாக என்ன முயற்சி செய்ய வேண்டும் மற்றும் இருக்க வேண்டும்? அது ஒவ்வொரு எண்ணமும் சக்திசாலியாக இருக்க வேண்டும், சாதாரணமானதாக மற்றும் வீணானதாக இல்லாமல் சக்திசாலியாக இருக்க வேண்டும். டீச்சரின் அர்த்தம் என்ன? சேவை செய்பவர்கள். ஒரு விநாடி கூட சேவை இல்லாமல் இருக்க வேண்டாம். முரளி படிப்பது மற்றும் சோதனை செய்வது இதுவோ மேலோட்டமான விஷயம். எப்படி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால் பொறுப்பாளர் ஆகியிருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு நேரத்தை விட மிக வேகமாக ஓட வேண்டும் என்ற முயற்சி (புருஷார்த்தம்) தான் செய்ய வேண்டும். இன்னும் நேரம் இருக்கிறது போகப் போகு குறைகள் நீங்கிவிடும் என்று அப்படி கூறக்கூடாது, "இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை" என்பது புத்தியில் இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு விநாடிக்காக "இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை" என்ற சுலோகன் இருக்கிறது! எப்பொழுது அந்த மாதிரி இப்பொழுது' என்ற சம்ஸ்காரத்தை நிரப்பினீர்கள் என்றால்,

அப்படி 'இப்பொழுது' என்று கூறும் ஆத்மாக்கள் சத்யுகத்தின் தொடக்கத்தில் வந்து விடுவார்கள். எப்பொழுது என்று கூறுபவர்கள் மத்தியில் வருவார்கள். எப்பொழுது என்று கூறுபவர்கள் நேரத்திற்காக காத்திருக்கிறார்கள் என்றால் பதவிக்காகவும் காத்திருப்பார்கள். எனவே ஒவ்வொரு விநாடி ஒவ்வொரு எண்ணத்தில் இந்த சுலோகன் நினைவிருக்கட்டும். ஒருவேளை இந்தப் பாடம் உறுதியாக இருக்கவில்லை என்றால் எப்பொழுதும் பலஹீனத்தின் சம்ஸ்காரம் இருக்கும். மஹாவீரரின் சம்ஸ்காரம் "இப்பொழுது இல்லையென்றால் ஒருபொழுதும் இல்லை" என்பதாகும். என்னைவிட இவர் முன்பு வந்தவர், இவர் செய்தார் என்றால் நான் செய்வேன் என்ற இது அலட்சியத்தின் சம்ஸ்காரம் ஆகும். என்ன எண்ணம் வருகிறதோ அதை இப்பொழுது செய்யத் தான் வேண்டும். நாளை இல்லை இன்று, இன்று இல்லை இப்பொழுது, அதாவது இப்பொழுது செய்ய வேண்டும். அனைவரும் விசேஷ ஆத்மாக்கள் தான் இல்லையா? தன்னை சிறியவர் என்றோ நினைக்கவில்லையே? முயற்சி செய்வதில் ஒவ்வொருவரும் பெரியவர்கள். காரிய விவகாரத்தில் பெரியவர்கள். சிறியவர்கள் இருக்கிறார்கள், ஆனால் முயற்சி செய்வதில் சிறியவர், பெரியவர் என்பது கிடையாது. முயற்சி செய்வதில் சிறியவர்கள் முன்னுக்குச் செல்ல முடியும். காரிய விவகாரத்தில் மரியாதைக்கான விஷயம் இருக்கிறது. முயற்சி செய்வதில் மரியாதைக்கான விஷயம் இல்லை. முயற்சி செய்வதில் யார் செய்வாரோ அவர் அடைவார். இப்பொழுது அந்த மாதிரி முயற்சி இருக்கிறதா அல்லது எப்படி அனைவருக்கும் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது, அதே போல் நடக்கிறதா? என்ற இந்த சோதனையை செய்ய வேண்டும். டீச்சர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். டீச்சர்களுக்கு அனேகரின் ஆசீர்வாதத்தின் லி்ஃப்டும் கிடைக்கிறது. மேலும் ஒருவேளை யாரையாவது பலஹீனமாக்குவதற்கான காரணமானவராக ஆகிவிடுகிறீர்கள் என்றால், அந்தப் பாவமும் ஏறுகிறது. இந்த சுமையின் காரணமாக என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடிவதில்லை. சுமையுள்ளவர் மேலே செல்ல முடியாது. எனவே விரும்பியபோதிலும் மாற்றம் ஏற்படவில்லை என்றால் அவசியம் சுமை இருக்கிறது. அந்த சுமையை விசேஷ யோகா மூலம், மரியாதைகள் மூலம் மற்றும் முழு ஈடுபாட்டின் மூலம் பஸ்பம் செய்யுங்கள். இல்லையென்றால் சுமையில் நேரம் கடந்து சென்று

விடும். முன்னேறிச் செல்ல முடியாது. அமிர்தவேளையில் எழுந்து தன்னுடைய இருக்கையை சரி (செட்) செய்யுங்கள். எப்படி இருக்கை இருக்கிறதோ அதன் பிரகாரம் செட் ஆகி இருக்கிறதா? இதை சோதனை செய்யுங்கள். தன்னுடைய நிலையை நன்றாக வைத்துக் கொள்ளுங்கள். தன்னுடைய நிலை சரியில்லை என்றாலும் சோதனை செய்வதினால் சரியாகி விடும். நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.01.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# டபுள் லைட் சொரூபம் ஆகுங்கள்!

பக்தி மார்க்கத்தில் லட்சுமியை மகாதானி என்று காண்பிக்கிறார்கள் என்றால் மகாதானியின் அடையாளமாக எதைக் காண்பிக்கிறார்கள்? (லட்சுமியின் கைகளை திறந்ததாக கொடுக்கும் ரூபத்தில் காண்பிக்கப்படுகிறது) செல்வம் கொட்டிக் கொண்டே இருக்கிறது. இது சக்திகளின் நினைவுச் சின்னமாகும். லட்சுமி என்றால் செல்வத்தின் தேவி. அந்த ஸ்தூல செல்வம் இல்லை, ஞானத்தின் செல்வம், சக்திகள் என்ற செல்வத்தின் தேவி அதாவது கொடுப்பவர். எனவே எப்படி இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார்கள் அந்த மாதிரி செல்வத்தின் தேவி ஆக வேண்டும். ஞானம் கொடுத்தாலும் சரி, அல்லது சக்திகள் கொடுத்தாலும் சரி. அப்படி நினைவுச்சின்னமாக சித்திரம் இருக்கிறது அதே போல் சைத்தன்யத்தில் தன்னை அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? ஒரு விநாடி கூட யாராவது உங்கள் எதிரில் வந்தாலும் நான் சிறிது அடைந்தேன் என்று அந்த மாதிரி அனுபவம் செய்ய வேண்டும். இப்பொழுது இந்த சேவை தேவையாக இருக்கிறது. அப்பொழுது தான் உலகிற்கு நன்மை ஏற்படும். இவ்வளவு அனைத்து ஆத்மாக்களுக்கும் அவசியம் கொடுக்கவோ வேண்டும். அப்படி கொடுப்பதின் சொரூபம் சூட்சுமம் மற்றும் மிக சக்திசாலியானது. நேரம் குறைவு மற்றும் பிராப்தி உயர்ந்தது. அந்த மாதிரி கொடுக்கக்கூடிய சக்திகள் அல்லது தேவிகள் எவ்வளவு பேர் தயாராகியிருக்கிறீர்கள். அந்த மாதிரி எத்தனை தேவிகள் இருப்பார்கள். இதே ஆதாரத்தில் நினைவுச்சின்னத்திலும் வரிசை எண் இருக்கிறது. சிலர் ஒவ்வொரு நேரமும் கொடுக்கக்கூடியவர். சிலர் எப்பொழுதாவது கொடுக்கக்கூடியவர். சிலர் வெகு சிலருக்கு கொடுக்கக்கூடியவர்கள், சிலர் அனைவருக்கும் கொடுக்கக்கூடியவர்கள், சிலர் வாய்ப்பு கிடைத்தால் செய்வோம் என்று கூறுகிறார்கள், களம் இருந்தால் அல்லது சகயோகம் கிடைத்தால் செய்வோம் என்று கூறுகிறார்கள். அப்படியானால் அவர்களுடைய நினைவுச் சின்னமாக எது இருக்கிறது?

அவருடைய நினைவுச் சின்னத்திலும் கூட நாள் கிழமை நிச்சயிக்கப்படுகிறது. அப்படி நிரந்தரமாக செய்பவர்களும் இருக்கிறார்கள், அவர்களுடைய பூஜையும் எப்பொழுதும் நடக்கிறது. யார் நேரம் மற்றும் சகயோகத்தின் ஆதாரத்தினால் வாய்ப்பை எடுக்கிறார்கள். அவருடை நினைவுச்சின்னத்தின் நாளும் நிர்ணயம் செய்யப்படுகிறது. அனேக தேவிகளுக்கு ஆடை மாற்றுவதற்கான, ஒவ்வொரு காரியத்திற்கும் பூஜை நடக்கிறது. இதிலிருந்து அவர்கள் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே முழு நேரமும் தானம் செய்தார்கள் என்பதாகும். அவர்களைத் தான் மகாதானி என்று கூறுவோம். எனவே அவர்களுடைய பூஜையை மகான் என்றும் மற்றும் மகான் நினைவுச்சின்னம் என்றும் கூறுவோம். ஒன்று யார் எப்பொழுதும் உடன் இருப்பவர்களுடன் அன்பை கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள், மற்றவர்களுடன் இருந்த போதிலும் அன்பின் துணையை கொடுப்பதில்லை அவருடைய நினைவுச் சின்னத்திலும் கூட முழு நேரமும் பூஜாரிகளின் துணை கிடைப்பதில்லை. யார் இங்கு சுயநலத்திற்காக வருகிறார்களோ அவர்களுடைய நினைவுச் சின்னத்திலும் கூட இது யாருடைய நினைவுச்சின்னம் என்று தெளிவாகிறது. இதுவும் ரகசியமாகும். இப்பொழுது அந்த மாதிரி ஆக வேண்டும். எப்பொழுதும் உடன் இருப்பவர்களுடன் அன்பின் துணையோடு இருக்க வேண்டும், தேவையான நேரத்தில் மட்டுமின்றி எப்பொழுதும் துணையை கொடுக்க வேண்டும் மற்றும் பெற வேண்டும். சுயநலமாக அல்ல, காரியத்தை செய்விப்பதற்காக அன்றி அன்புடன் மற்றும் நிரந்தரமாக தன்னுடைய துணையை வைத்துக் கொள்ள வேண்டும். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 27.01.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உன்னதமான மூன்று ஈஸ்வரிய வரதானங்கள்!

இன்று மிகப் பழையவர்களாக இருந்து புதிய குழந்தைகள் ஆனவர்கள் தன்னுடைய சொந்த ஸ்தானம் மற்றும் தன்னுடைய சாகார இனிமையான இல்லம் மதுபன் சொர்க்காஸ்ரமத்தில் சந்திப்பின் பிறப்புரிமையைப் பெற்று மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி மகிழ்ச்சி நிறைந்த ஆத்மாக்களைப் பார்த்து பாப்தாதாவும் ஒவ்வொரு ஆத்மாவின் பிராப்தி மற்றும் அதிர்ஷ்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். எப்படி குழந்தைகளுக்கு தந்தை மூலமாக ஆஸ்தி பிராப்தி ஆவதினால் மகிழ்ச்சி ஏற்படுகிறதோ அதாவது குஷி ஏற்படுகிறதோ, அதே போலவே பாப்தாதாவிற்கும் கடைசியில் வந்தும் வேகமாக முயற்சி செய்பவர்களின் தீவிர முயற்சியின் ஈடுபாட்டில் மூழ்கியிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. வேகமாக முயற்சி செய்பவர்களின் முகம் மற்றும் நடத்தை தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் ஆன்மீகமாகத் தென்படுகிறது. ஆன்மீகத்தைத் தவிர வேறு எந்த எண்ணம் மற்றும் நினைவும் இருப்பதில்லை. அதாவது தந்தை மூலமாக பிராப்தியாகியிருக்கும் அனைத்து சக்திகள் சொரூபத்தில் தென்படுகின்றன. அவருடைய ஒவ்வொரு பார்வையில் ஒவ்வொரு ஆத்மாவை பார்வையாலேயே நன்மை செய்யும் ஆன்மீகம் தென்படுகிறது.

அந்த மாதிரி உயர்ந்த நிலையை அடைவதற்காக எப்பொழுதும் இரண்டு விஷயங்களை நினைவில் வையுங்கள். ஒன்று தன்னை அழியாதவன் என்று புரிந்து கொள்ளுங்கள், இன்னொன்று தன்னை எப்பொழுதும் மூன்று காலங்களையும் தெரிந்தவர் என்று புரிந்து கொள்ளுங்கள். நிராகார நிலை, அழியாத ஆசனதாரி, அழியாதவர் மற்றும் சாகார கர்ம யோகியின் நிலை மூன்று காலங்களையும் தெரிந்த திரிமூர்த்தி

தந்தையின் இதய சிம்மாசனதாரி. ஒவ்வொரு எண்ணத்தையும் சொரூபத்தில் கொண்டு வருவதினால் முதலில் நிராகார மற்றும் சாகார இரண்டு சொரூபத்திலும் நிலைத்திருக்கிறேனா என்ற இந்த விஷயங்களை சோதனை செய்யுங்கள். இந்த நினைவினா இயல்பாகவே சக்தி சொரூபம் ஆகி விடுவீர்கள் அதாவது ஹெல்த் (ஆரோக்கியம்), வெல்த் (செல்வம்) மற்றும் ஹேப்பினஸ் சந்தோஷம் ஆகியவற்றின் அனுபவம் ஒவ்வொரு நேரமும் இருக்கும். உடல் சம்மந்தப்பட்ட கர்ம விளைவுகள் ஈட்டியை விட பெரிய ரூபத்தில் இருந்தாலும், எப்பொழுதும் தன்னை ஒரு பார்வையாளர் என்று புரிந்து கொள்வதினால் கர்ம விளைவுகளை அனுபவிப்பதின் வசம் ஆக மாட்டீர்கள். ஒவ்வொரு கர்ம விளைவு ஈட்டியிலிருந்து முள்ளுக்குச் சமமானதாக (குறைவாக) அனுபவம் ஆகும். எதிர்காலத்தில் பல ஜென்மங்களுக்கு கர்ம வினைகளிலிருந்து விடுபடு வதற்கான குஷி இந்த கர்ம விளைவுகளை முடிப்பதற்கான மருந்து ரூபம் ஆகி விடுகிறது. குஷி, மருந்தின் டானிக்காக ஆகி விடுகிறது.

நான் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறேனா? என்று தன்னை சோதனை செய்யுங்கள். நான் நிரந்தர ஆரோக்கியத்திற்கான வரதானத்தைப் பெற்றிருக்கிறேனா? வரமளிக்கும் வள்ளல் தந்தை மூலமாக மூன்று வரதானங்கள் -எவர் ஹெல்தி, வெல்தி மற்றும் ஹேப்பினஸை பிராப்தி செய்திருக்கிறேனா? சதா காலத்திற்கான ஆஸ்தியை பிராப்தி செய்திருக்கிறேனா அல்லது அற்ப காலத்திற்காக பிராப்தி செய்திருக்கிறேனா? ஏதாவது மாயாவி நோயின் வசமாகி தன்னுடைய சதா காலத்தின் எவர் ஹெல்தியின் ஆஸ்தியை இழந்து விடுவதில்லையே? தந்தை மூலமாக எவர் வெல்தி அதாவது சர்வ சக்திகளின் பொக்கிஷங்களால் நிரம்பிய வரதானத்தை பிராப்தி செய்திருக்கிறேனா? அனைத்து பொக்கிஷங்களின் அதிபதியாக அனுபவம் செய்கிறீர்களா அதாவது பிராப்தி இல்லை என்ற பொருள் தேவதைகளின் பொக்கிஷத்தில் இல்லை என்ற மகிமையோ இருக்கிறது ஆனால் தேவதைகளையும் விட உயர்ந்த பிராமணர்களின் மகிமையாக பிராப்தி இல்லாத சக்தி பிராமணர்களின் பொக்கிஷத்தில் ஒன்றும் இல்லை என்பது இருக்கிறது -அந்த மாதிரி எவர் வெல்தியாக அனுபவம் செய்கிறீர்களா?

எவர் வெல்தியின் கூடவே தன்னை எவர் ஹேப்பி அதாவது எப்பொழுதும் மகிழ்ச்சியையும் அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை ஏதாவது இயற்கை மற்றும் மாயாவின் ஈர்ப்பு இல்லை என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அந்த மாதிரி எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவரில், என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது, இன்னும் அடைய வேண்டியதற்கு ஒன்றும் இல்லை என்ற இந்த ஒரே எண்ணம் தான் நினைவில் இருக்கிறது. அந்த மாதிரி எண்ணத்தில் நிலைத்திருக்கக் கூடியவர்களின் அதாவது எவர் ஹேப்பியாக இருப்பவர்களின் அடையாளமாக என்ன இருக்கும்?

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பவர் எண்ணம், சொல் மற்றும் செயலினால் அனைத்து ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் குஷியின் தானத்தைக் கொடுத்துக் கொண்டே இருப்பார். எந்த ஆத்மாவிற்காகவும் தந்தைக்குச் சமமாக துக்கத்தை நீக்குபவர், சுகம் கொடுப்பவர், எப்பொழுதும் கவலையில்லா ஊரின் மகாராஜாவாக அனுபவம் செய்வார். மகாராஜா என்றால் வள்ளல். அந்த மாதிரி மகிழ்ச்சி நிறைந்த முகமுடைய ஆத்மாவின் ஒவ்வொரு எண்ணத்தின் எண்ண அலைகள் மூலமாக ஒவ்வொரு விநாடியின் ஆன்மீகப் பார்வை மூலமாக, ஒவ்வொரு விநாடியின் தொடர்பின் மூலமாக, வாயிலிருந்து வரும் ஒரு வார்த்தை மூலமாக, துக்கம் மற்றும் வேதனையில் இருக்கக்கூடிய ஆத்மா தன்னை சுகமானவராக மற்றும் குஷியையும் அனுபவம் செய்வார். அவருடைய காரியமே சுகம் கொடுப்பது மற்றும் சுகம் பெறுவதாக இருக்கும். எப்படி பிரஜைக்கு தன்னுடைய தகுதியான இராஜாவைப் பார்த்து குஷி ஏற்படுகிறதோ, அதே போல் எவர் ஹெல்தி, வெல்தி மற்றும் ஹேப்பி ஆத்மாவைப் பார்த்து எந்தவொரு துக்கமான ஆத்மாவும் சுகத்தை அனுபவம் செய்யும். பிராப்தி இல்லாத ஆத்மா வள்ளலைப் பார்த்து பிராப்தியின் குஷியில் ஆட ஆரம்பிக்கும். அந்த மாதிரி தன்னை அனுபவம் செய்கிறீர்களா? கொடுக்கக்கூடிய வள்ளலின் குழந்தைகள், தந்தைக்குச் சமமான வள்ளல் ஆவீர்கள் அல்லது பக்தர்களுக்குச் சமமாகப் பெறுபவர்களாக இருக்கிறீர்களா? அல்லது கொடுப்பது மற்றும் பெறுவது சேர்ந்தே நடந்து கொண்டிருக்கிறதா? பெறுவதே, கொடுப்பதற்காகத் தான், பொக்கிஷம் இருப்பதே அனைவருக்கும் கொடுப்பதற்காக மற்றும் உலக நன்மைக்காகத் தான். ஒவ்வொரு விநாடியும், பெறுவதின் கூடவே கொடுக்கக்கூடிய

வள்ளலாகவும் ஆகுங்கள், அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறப்படுவீர்கள். தன்னுடைய கொடுக்கும் மற்றும் பெறும் கணக்கை சோதனை செய்யுங்கள். எவ்வளவு பெற வேண்டுமோ அவ்வளவு பெறுகிறேனா மற்றும் பெறுவதின் கூடவே எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்த அளவே கொடுக்கிறேனா? பெறுவதும், கொடுப்பதும் சேர்ந்தே மற்றும் சமமாக இருக்கிறதா? அந்த மாதிரி உலகிற்கு நன்மை செய்பவர் தான் உலக மகாராஜன் ஆக முடியும். புரிந்ததா?

அந்த மாதிரி மகாதானி, அனைத்து பிராப்திகள் மூலமாக அனைத்து ஆத்மாக்களை நிரம்பியவர் ஆக்கக்கூடிய, பிச்சைக்காரனை அதிகாரி ஆக்கக்கூடிய, பலமற்ற ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்கக்கூடிய, எவர் ஹெல்தி, வெல்தி மற்றும் ஹேப்பி ஆத்மாக்களுக்கு மற்றும் மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தனிப்பட்ட சந்திப்பு: தன்னை எப்பொழுதும் பாப்தாதாவுடன் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா அல்லது தனியாக இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா?** எப்படி தந்தையை ஆயிரம் புஜங்கள் உள்ளவராகக் காண்பிக்கிறார்கள், சர்வ சக்திவானாக இருந்த போதிலும் குழந்தைகளின் துணையின் நினைவுச் சின்னத்தை புஜங்களின் ரூபத்தில் காண்பிக்கிறார்கள், அதே போல் குழந்தைகள் நீங்களும் தன்னை எப்பொழுதும் சர்வ சக்திவான் தந்தையின் உடன் இருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா அல்லது சில நேரம் அனுபவம் செய்கிறீர்களா? யார் எப்பொழுதும் துணையை அனுபவம் செய்வார்களோ அவர் ஒருபொழுதும் எந்தவொரு தேகதாரியின் துணையின் அவசியத்தை அனுபவம் செய்ய மாட்டார். ஒருபொழுதும் எந்த சேவையிலும் தேகதாரியின் ஆதாரத்தை எடுக்க மாட்டார். மரியாதைப்படி, கூட்டத்திற்கு ஏற்றபடி சகயோகத்தைப் பெறுவது வேறு விஷயமாகும். மற்றபடி எந்தவொரு சூழ்நிலையிலும், இவர் என்னை இந்த சூழ்நிலையிலிருந்து கடந்து செல்லச் செய்வார், அறிவுரை கொடுப்பார் அல்லது ஆதரவு கொடுப்பார் என்று தேகதாரியின் நினைவு வந்தது என்றால் சர்வ சக்திவானின் ஆதாரம் உடன் இருக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. எப்பொழுதும் உடன் இருப்பவருக்கு

தந்தையுடன் நெருங்கிய உறவு இருக்கும் காரணத்தினால் எண்ணத்தில், ஆன்மீக உரையாடலிலும் இதை பாபாவிடம் கேட்போம் என்று பாபாவின் நினைவு வரும். ஏதாவது பொறுப்பிலிருக்கும் டீச்சரின் நினைவு வருகிறது. உடன் இருக்கும் யாருடைய நினைவாவது வருகிறது அல்லது தனக்குச் சமமானவர்களின் நினைவு வருகிறது என்ற இதுவும் இருக்கும், அதுவும் காரியம் செய்வதற்காகத் தான் ஆனால் மனதில் புத்தியில் எப்பொழுதும் பாபா பாபா என்று நினைவு வரட்டும். எப்பொழுது நேரடியாக துணையைக் கொடுப்பேன் என்ற உறுதிமொழி இருக்கிறது என்றால் உறுதிமொழியின் லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நேரம் இரண்டு தந்தையின் துணையை தனித்தனியாக அனுபவம் செய்ய முடியும். பிறகு முழுக்கல்பத்திலும் இது இருக்காது. எப்பொழுது இது இப்போதைக்கான பிராப்தி மட்டும் தான், பின்பு இருக்காது என்றால் அதனுடைய முழுமையான லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது விஷயம் வந்தால் எப்பொழுதும் பாபா தான் நினைவிலிருக்க வேண்டும். இதைத் தான் நிரந்தர யோகி என்று கூறுவது. ஒவ்வொரு அடியிலும் தந்தையின் நினைவு இருக்கிறது என்றால் இதுவும் யோகா தான். அந்த மாதிரி நிரந்தர யோகியாக இருக்கிறீர்களா அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? எப்பொழுது தந்தை அவரே துணையைக் கொடுப்பதற்கு முன்னுக்கு வருகிறார் என்றால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் தான் இல்லையா? எப்பொழுது அரைக் கல்பம் பக்தி மார்க்கத்தில் துணை கொடுப்பதற்காக தந்தையை சம்மதம் செய்ய முயற்சி செய்தீர்கள். இப்பொழுதோ தந்தை அவரே முன்னுக்கு வருகிறார் என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டும் இல்லையா? எப்படி ஸ்தூலமாக யாராவது ஏதாவது ஒரு பொருளை மனமுவந்து கொடுக்கிறார் என்றால் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது பண்புள்ள செயல் என்று சொல்ல மாட்டார்கள். இதை மரியாதை என்று கூறுவோமா? இதுவோ கடவுளால் மனமுவந்து தரப்படுவது. எப்பொழுதும் தந்தையின் துணை என்றால் நிரந்தர யோகி. அவரோ எப்பொழுதும் லைட் ரூபத்தில் இருக்கிறார் என்றால் அந்த மாதிரியானவரின் தொடர்பினால் லைட் ரூபமாகவும் மற்றும் லேசாகவும் ஆகிவிடுவீர்கள் என்றால் டபுள் லைட் ஆகியது இல்லையா? எப்பொழுது சுமையை எடுத்துக் கொள்வதற்காக தந்தை அவரே முன்னுக்கு வருகிறார் என்றால், பிறகு நீங்கள் ஏன் சுமையை எடுக்கிறீர்கள்? சுமையுள்ளவர் முழு வேகத்தில் செல்ல முடியாது.

எனவே இப்பொழுது இந்த அனேக விதமான சுமைகளிலிருந்து லேசாகி விடுங்கள். தன்னுடைய ஒவ்வொரு மூலையையும் சுத்தம் செய்யுங்கள், குப்பையை உள்ளுக்குள்ளேயே பாதுகாப்பாக வைக்காதீர்கள். வாய்ப்பு கிடைத்தது என்றால் தருவோம் என்று அப்படி இருக்க வேண்டாம். இருப்பதோ குப்பை தான் இல்லையா? குப்பை மூலம் கிருமிகள் உற்பத்தி ஆகும். அதை வைப்பதின் அர்த்தம் அதை வளரச் செய்வதாகும். எனவே எப்பொழுது குப்பையிலிருந்து காலியாவீர்களோ அப்பொழுது தந்தை மூலமாக கிடைத்திருக்கும் பொக்கிஷத்தை தன்னுள் நிரப்ப முடியும். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்: ஸ்ரீமத் பிரகாரம் சரி பாபா, என்று கூறி பாபாவை ஆஜராகியிருப்பதாக அனுபவம் செய்யக்கூடிய அனைத்து பிராப்திகள் நிரம்பியவர் ஆகுக!

யார் ஒவ்வொரு விஷயத்திலும் தந்தையின் ஸ்ரீமத் பிரகாரம் "சரி ஐயா, சரி ஐயா" என்று கூறுகிறார்கள் என்றால், குழந்தைகள் அவ்வாறு சரி ஐயா என்று கூறுவது, தந்தை குழந்தைகளின் எதிரில் ஆஜராகி விடுவதாகும். எப்பொழுது ஐயா ஆஜராகி விட்டார் என்றால் எந்த விஷயத்தின் குறையும் இருக்காது. எப்பொழுதும் நிரம்பியவர் ஆகி விடுவீர்கள். வள்ளல் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவர் இருவர்களின் பிராப்திகளின் பாக்கியத்தின் நட்சத்திரம் நெற்றியில் ஜொலிக்க ஆரம்பிக்கும்.

சுலோகன்: பரமாத்மா ஆஸ்தியின் அதிகாரியாகி இருந்தீர்கள் என்றால் அடிமைத் தனம் வர முடியாது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 28.01.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக நட்சத்திரங்களின் சபை (கூட்டம்)!

இன்று பாப்தாதா நட்சத்திரங்களின் ஆன்மீக சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சபையில் விசேஷமாக மூன்று விதமான நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் நான் எந்த விதமான நட்சத்திரம் என்று தன்னைத் தானே தெரிந்திருக்கிறீர்களா? ஒன்று -வெற்றி நட்சத்திரங்கள், இரண்டாவது அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் மற்றும் மூன்றாவது நம்பிக்கை நட்சத்திரங்கள். இப்பொழுது நான் யார் என்று ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேட்க வேண்டும். முழு நாளின் நடவடிக்கையில் எண்ணம், மூச்சு, நேரம், பேச்சு, காரியம் மற்றும் உறவு மற்றும் தொடர்பில் வெற்றி அடைபவராக அதாவது வெற்றி நட்சத்திரமாக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தை மூலமாக அமைதி மற்றும் ஞான ரத்தினங்களின் செல்வம் பிறப்புரிமையின் ரூபத்தில் பிராப்தி ஆகியிருக்கிறது. அதே போல் ஒவ்வொரு விஷயத்தில் மற்றும் ஒவ்வொரு நேரமும் வெற்றியும் பிறப்புரிமையின் ரூபத்தில் அனுபவம் ஆகிறதா? அதாவது பிராப்தி சகஜமாக அனுபவம் ஆகிறதா அல்லது கடின உழைப்பிற்குப் பின்பா? உழைப்பு அதிகம் மற்றும் வெற்றி குறைவாக அனுபவம் ஆகிறதா? எவ்வளவு நினைக்கிறீர்களோ, செய்கிறீர்களோ அந்த அளவு எண்ணம் மற்றும் செயலின் பிரத்யக்ஷ பலன் பிராப்தி ஆகிறதா? அல்லது ஆகியே விடும். இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுதாவது ஆகும் அந்த மாதிரி எதிர்கால பலனின் நம்பிக்கையிலேயே இருக்கிறீர்களா? எண்ணம், உருவாவதின் கூடவே வெற்றி நிச்சயிக்கப்பட்டது என்ற இந்த நிச்சயத்தின் எண்ணம், சேர்ந்தே ஏற்படுகிறதா? எப்படி ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு பிராப்தி என்ற மகிமை இருக்கிறதோ அதே போல் ஒவ்வொரு அடியிலும் வெற்றி அடங்கியிருக்கிறதா? எண்ணம் மற்றும் காரியத்தின் விதையில் வெற்றி என்ற மரம் அடங்கியிருக்கிறது. வெற்றி நிழலுக்குச் சமமாக காரியத்தின்

பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறது என்று அப்படி அனுபவம் ஆகட்டும். அவரைத் தான் வெற்றி நட்சத்திரம் என்று கூறமுடியும்.

இரண்டாவது அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள். அதிர்ஷ்ட நட்சத்திரங்களிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் என்ன எண்ணம் வைக்கிறார்களோ மற்றும் காரியம் செய்வார்களோ அதில் தேவையான அளவு மட்டும் உழைப்பு இருக்கும், ஆனால் பிராப்தி உழைப்பின் கணக்கை விட அதிகமாக இருக்கும். அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் தன்னுடைய அதிர்ஷ்டத்தைத் தெரிந்து ஒவ்வொரு நேரமும், என்னுடைய பாக்கியத்தின் பூட்டை திறந்து விட்டீர்கள் என்று பாப்தாதாவிற்கு லட்சக்கணக்கான தடவைகள் நன்றி கூறுவார்கள். அதிர்ஷ்ட நட்சத்திரங்களின் வார்த்தையில் மகான் ஆக்கக்கூடிய தந்தையின் மகிமை உள்ளத்திலிருந்து தானாகவே வெளியாகிக் கொண்டிருக்கும். மேலும் அவருடைய ரூபத்தில் குஷியின் ஜொலிப்பு விசேஷமாகத் தென்படும். அவர்களுடைய விசேஷ திட்டமாக, எப்பொழுதும் தந்தையின் பெயரை புகழடையச் செய்து, நன்றிக் கடனை அடைப்பதாக அதாவது தந்தையின் ஒவ்வொரு காரியத்தை தன்னுடைய வாழ்க்கை மூலம் பிரத்யக்ஷம் செய்வதற்கானதாக இருக்கும். எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவராக மற்றும் தந்தை மேல் அன்பானவர்களாக ஆக்குபவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் ஆஹா பாபா ஆஹா எதிர்காலம்! என்ற இந்த சுலோகன் தான் நினைவு மற்றும் வார்த்தைகளில் இருக்கும். அந்த மாதிரி தன்னை அதிர்ஷ்ட நட்சத்திரம் என்று நினைக்கிறீர்களா?

மூன்றாவது நம்பிக்கை நட்சத்திரங்கள். அவர்களுடைய விசேஷம் என்னவாக இருக்கும்? சிலர் நம்பிக்கை நட்சத்திரத்திலிருந்து வெற்றி அடைபவராகவும் ஆகி விடுகிறார்கள். நம்பிக்கை நட்சத்திரங்கள் எப்பொழுதும் தந்தை மற்றும் உயர்ந்த ஆத்மாக்களின் துணையை எடுத்துக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு அடியிலும் ஆதாரத்தின் அனுசாரம் நடந்து கொள்வார்கள். ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தில் ஆகுமா அல்லது ஆகாதா. உயர்ந்ததா அல்லது சாதாரணமானதா, செய்யலாமா அல்லது செய்ய வேண்டாமா என்று முடிவெடுக்கும் சக்தி இருக்காது. அதாவது அவரே முடிவெடுப்பவராக

ஆக முடியாது. தீர்ப்பு அளிப்பதற்காக அடிக்கடி ஏதாவது நீதிபதியின் அவசியம் இருக்கும். உயர்ந்த எண்ணம் உடையவராக இருப்பார் ஆனால் உறுதியான எண்ணம் வைத்திருப்பவராக இருக்க மாட்டார். ஒவ்வொரு சூழ்நிலையில் மற்றும் சேவையின் காரியத்தில் ஊக்கம், உற்சாகம் இருக்கும் ஆனால் தைரியம் குறைவாக இருக்கும். அதற்காக தைரியத்தை ஊட்டும் உடன் இருப்பவர் ஒருவர் தேவையாக இருக்கிறது.

திட்டங்கள் மிக நல்லதாக இருக்கும், எண்ணம் சக்திசாலியானதாகவும் இருக்கும் ஆனால் சொரூபத்தில் முழுமையாக கொண்டு வர முடியாது. பாதியையோ அல்லது முக்கால் பகுதியையோ, கொஞ்சம் வார்த்தைகள் மூலமாக, கொஞ்சம் செயல் மூலமாக முழுமையாக ஆக்க முடியும் ஆனால் அவருடைய ஒரு விசேஷம் இருக்கும். ஒவ்வொரு நேரமும் ஆதாரத்தை எடுக்கும் காரணத்தினால் பாபாவின் நினைவு இருக்கும். அவருடைய வாயிலிருந்து போதையோடு மற்றும் நிச்சயத்தோடு என்னுடைய பாபா, என்னுடன் இருக்கிறார் என்ற வார்த்தைகள் வெளியாகும். எண்ணத்தை காரியத்தில் கொண்டு வந்து காண்பிப்பார்கள் என்ற அந்த நாளும் வரும். அந்த மாதிரியான நம்பிக்கை ஒவ்வொரு நேரமும் இருக்கிறது. மனமுடைந்து போகமாட்டார்கள். உறவு மற்றும் நெருக்கத்திலும் அனைவருக்கும் மரியாதை செய்யும் காரணத்தினால் அன்பானவர்களாக ஆகிறார்கள். அவருடைய முகத்தில் பரிவாரத்தின் மேல் இருக்கும் அன்பின் ஜொலிப்பு எப்பொழுதும் தென்படும். அந்த மாதிரி நம்பிக்கை நட்சத்திரங்கள் மாயாவின் ஒரு முக்கியமான தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள். அது எது? அவர்கள் தேக அபிமானத்தில் ஒருபொழுதும் வருவதில்லை. தேக அபிமானம் என்றால் புத்திசாலித்தனத்தின் அபிமானம் மற்றும் புத்தியின் அபிமானம். அவர்கள் இவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் புத்தியில் எதுவுமே ஓடுவதில்லை என்று அப்படி அர்த்தமல்ல. திட்டம் ஓடுகிறது. நம்பிக்கை நட்சத்திரங்களில் தந்தைக்கும் நம்பிக்கை இருக்கிறது, எந்த நேரமும் உயரே தாண்டுதல் செய்ய முடியும். நம்பிக்கையற்ற குழந்தைகள் அனைவரின் நம்பிக்கையை தன் மேல் வைப்பவராக ஆகி விடுகிறார்கள். மூன்று விதமான நட்சத்திரங்கள் எவை என்று இப்பொழுது புரிந்ததா? எந்த நேரமும் ஹை ஜம்ப் (உயரம்

தாண்டுதல்) செய்ய முடியும் என்று நம்பிக்கை நட்சத்திரங்கள் மேல் தந்தைக்கும் நம்பிக்கை இருக்கிறது. எந்த நேரமும் நம்பிக்கை அற்றவர்கள் அனைவரின் நம்பிக்கையை தன் மேல் வைக்க வைப்பதற்கு காரணமாகி விடுகிறார்கள் ஆனால் இது நம்பிக்கைக்குரியவர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் மேல் நம்பிக்கை வைப்பது, இதுவும் டிராமாவில் யாருக்காவது அதிசயமான பங்கும் உருவாக்கப்பட்டிருக்கிறது. நல்லது.

எப்பொழுதும் தன்னை வெற்றியின் நட்சத்திரமாக ஆக்குவதின் லட்சியம் மற்றும் லட்சணத்தை காண்பிப்பவர்களுக்கு, அனைத்து சக்திகளின் அதிகாரி, தந்தையின் அனைத்து பிராப்திகளின் அதிகாரி, பிரம்மாண்டம் மற்றும் உலகின் அதிகாரி, இயற்கை மற்றும் மாயா மேல் வெற்றி அடையக்கூடிய, வெற்றி நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். ஓம் சாந்தி.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 01.02.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக ஷமா (விளக்கொளி) மற்றும் மூன்று விதமான ஆன்மீக விட்டில் பூச்சிகள்!

இன்று ஆன்மீக ஷமா (விளக்கொளி) ஆன்மீக விட்டில் பூச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து விட்டில் பூச்சிகளும் ஒரே விளக்கில் சுவாஹா ஆவதற்காக வரிசைக்கிரமமாக முயற்சி செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். யார் நம்பர் ஒன் வீட்டில் பூச்சியாக இருக்கிறாரோ அவருக்கு தன்னுடைய அதாவது இந்த தேக உணர்வின், இரவு பகலின், பசி மற்றும் தாகத்தின், தன்னுடைய சுகத்தின் சாதனங்களின், ஓய்வின், அப்படி எந்த விஷயத்தின் ஆதாரமும் இருப்பதில்லை. அனைத்து விதமான உடல் சம்மந்தப்பட்ட நினைவிலிருந்து மறந்திருப்பவர் அதாவது நிரந்தரமாக விளக்கின் அன்பில் ஐக்கியமாகி இருப்பவர். எப்படி விளக்கானவர் ஜோதி சொரூபமாக இருக்கிறாரோ, லைட், மைட் ரூபமாக இருக்கிறாரோ அதே போல் விளக்கிற்கு சமமாக தானும் லைட், மைட் ரூபத்தில் இருக்கிறார். இரண்டாவது விதமான விட்டில் பூச்சிகள் விளக்கின் லைட் மற்றும் மைட்டைப் பார்த்து அதன் பக்கம் அவசியம் ஈர்க்கப்படுகிறார்கள், அருகில் செல்ல விரும்புகிறார்கள், சமமாக ஆக விரும்புகிறார்கள், ஆனால் தேக உணர்வின் நினைவு மற்றும் தேகத்தின் உறவின் நினைவு, தேகத்தின் வைபவங்களின் நினைவு, தேக உணர்வின் வசமாகி தமோகுண சம்ஸ்காரங்களின் நினைவு அருகில் செல்வதற்கான தைரியம் மற்றும் துணிச்சலை தாரணை செய்ய விடுவதில்லை. இந்த விதவிதமான நினைவுகளின் குழப்பத்தில் நேரத்தை இழந்து விடுகிறார்கள். முதல் நம்பர் அன்பில் ஐக்கியமாகியிருக்கும் விட்டில் பூச்சி, தந்தைக்குச் சமமாக இருக்கும் சொரூபம் மற்றும் சக்திகளை தாரணை செய்பவர், தந்தையின் அனைத்து பொக்கிஷங்களை தன்னுள் நிரப்புபவர், சமமாவது என்றால்

நிரப்பிவிடுவது, அதாவது இறக்கவும் தயாராக இருப்பவர். இரண்டாம் நம்பர் அனேக விதமாக சுற்றிச் சுற்றி வருபவர் மற்றும் அனேக நினைவுகளின் குழப்பத்தில் இருப்பவர். அவர் நிரப்புபவர், இவர் யோசிப்பவர். மூன்றாம் நம்பர் விட்டில் பூச்சிகள் விளக்கைப் பார்த்து ஈர்க்கவும் படுகிறார்கள். யோசிக்கவும் செய்கிறார்கள் ஆனால் இருவிதமான குழப்பத்தில் இருக்கிறார்கள், அதாவது இரண்டு படகுகளில் கால் வைக்க விரும்புகிறார்கள். மாயாவின் அற்ப காலத்தின் சுகத்தையும் விரும்புகிறார்கள் மற்றும் ஷமா மூலமாக மற்றும் தந்தை மூலமாக அழியாத பிராப்தியையும் விரும்புகிறார்கள். இவர்கள் தான் அடிக்கடி கேட்பவர்கள். அவர்கள் யோசிப் பவர்கள், மேலும் இவர்கள் இந்த மாதிரி செய்யலாமா? அல்லது வேண்டாமா என்று கேட்பவர்கள். பிராப்தி ஆகுமா அல்லது ஆகாதா, ஆக முடியுமா அல்லது ஆக முடியாதா? கடினமா அல்லது சுலபமா? இந்த ஒரு வழி தான் சரியானதா? அல்லது வேறு வழியும் இருக்கிறதா? அந்த மாதிரி தன்னிடமும் மற்றும் மற்ற அனுபவி ஆத்மாக்களிடமும் கேட்பவர்கள். இச்சை இருக்கிறது, ஆனால் இச்சை என்றால் என்னவென்று அறியாத நிலை அடைவதற்கான துணிச்சலே இல்லை. சந்திக்கவும் விரும்புகிறார்கள், ஆனால் உடலில் உயிரோடு இருந்து கொண்டே இறக்க விரும்பவில்லை. உயிரோடு இருந்து கொண்டே இறப்பதில் மற்றும் விடுவதில் இதயம் உடைந்து விடுகிறது. அந்த மாதிரி மூன்று விதமான விட்டில் பூச்சிகள் விளக்கின ஒளியைத் தேடி வருகிறார்கள்.

இப்பொழுது நான் எந்த விதமான விட்டில் பூச்சி என்று தன்னைத் தானே கேளுங்கள்! அனேக விதமான நினைவுகளின் குழப்பம் முடிவடைந்து விட்டதா? அல்லது இன்னும் ஏதாவது குழப்பம் தன் பக்கம் ஈர்த்து விடுகிறதா? ஒருவேளை ஏதாவது வீணான நினைவின் குழப்பத்தில் இதுவரை வந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் சுயதரிசன சக்கரதாரி என்ற சங்கமயுக பிராமணர்களின் பட்டத்தை பிராப்தி செய்ய முடியாது. யார் சுயதரிசன சக்கரதாரியாக இல்லையோ அவர் எதிர்காலத்தின் சக்கரவர்த்தி இராஜாவாகவும் இருக்க மாட்டார். 63 ஜென்மங்களை பக்தி மார்க்கத்தின் அனேக விதமான வீணானவைகளைச் சுற்றி வந்ததிலேயே இழந்தார். அதே சம்ஸ்காரம் விரும்பாவிட்டாலும் இப்பொழுது சங்கமயுகத்திலும் ஏன் வெளிப்படுத்தி விடுகிறீர்கள். சுற்றி வருவதில் பிராப்தியின் அனுபவம் ஆகிறதா அல்லது சோர்வு

ஏற்படுகிறதா? 63 ஜென்மங்கள் சுற்றி வந்து அனைத்தையும் இழந்து, தன்னையும் மற்றும் தந்தையையும் மறந்து இதுவரையிலும் கூட புகலிடம் கிடைத்தும் சுற்றி வருகிறீர்கள், களைப் படையவில்லையா? அழியாத பிராப்தியாகியும், அழியும் அற்ப காலத்தின் பிராப்தி இப்பொழுது கூட ஈர்க்கிறதா? இதுவரையிலும் வேறு ஏதாவது புகலிடம் பிராப்தி செய்விப்பவர் பார்வையில் தென்படுகிறாரா என்ன? அல்லது உயர்ந்த புகலிடம் கிடைத்த போதிலும் அற்ப காலத்திற்கான புகலிடத்தை கடைசி நேரத்திற்காக அதாவது அந்த மாதிரியான நேரத்திற்காக தயார் செய்து வைத்திருக்கிறீர்களா? அந்த மாதிரியும் அதிக சாதுர்யமானவர்கள் இருக்கிறார்கள். பெறும் நேரத்தில் அனைத்தையும் பெறுவதில் சாதுர்யமானவர்கள் ஆனால் விடும் நேரத்தில் தந்தையோடு தன்னுடைய சாதுர்யத்தைக் காண்பிக்கிறார்கள். என்ன சாதுர்யகத்தை செய்கிறார்கள்? விடும் நேரத்தில் வெகுளியாகி விடுகிறார்கள். முயற்சி செய்பவர்கள், அந்த நேரத்தில் விடுபட்டு விடும், சூழ்நிலை அந்த மாதிரி, கடுமையான கணக்கு, வழக்கு இருக்கிறது. விரும்புகிறேன் ஆனால் என்ன செய்வது? மெது மெதுவாக ஆகி விடும். அந்த மாதிரி வெகுளியாகி காரணத்தை உருவாக்குகிறார்கள். ஞானம் நிறைந்த தந்தைக்கும் ஞானம் சொல்லத் தொடங்கி விடுகிறார்கள். கர்மங்களின் விளைவைத் தெரிந்திருப்பவருக்கு தன்னுடைய கர்மக் கதைகளை கூறிவிடுகிறார்கள். மேலும் பெறும் சமயத்திலோ சாதுர்யமாக ஆகி விடுகிறார்கள். என்ன சாதுர்யமாக கூறுகிறார்கள் "நீங்களோ இரக்கமனமுடையவர், வரமளிப்பவர். நானும் அதிகாரி ஆவேன். குழந்தையாகி இருக்கிறேன் என்றால் முழுமையான அதிகாரம் எனக்கு கிடைக்க வேண்டும்". பெறும் நேரத்தில் முழுமையாக பெற வேண்டும் மற்றும் விடுவதில் கொஞ்சம் கொஞ்சம் மறைக்க வேண்டும் அதாவது தன்னுடைய பழைய சம்ஸ்காரம், சுபாவம் மற்றும் சம்மந்தம் அதையும் சேர்த்தே வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி சாதுர்யமானவராக ஆகி விட்டார் இல்லையா? பெறுவது முழுமையாக பெறுவார், ஆனால் கொடுப்பதில் சக்திக்கேற்றபடி கொடுப்பார். அந்த மாதிரி சாதுர்யத்தைக் காண்பிப்பவர் எந்த மாதிரியான பிராப்தியை அடைவார். அந்த மாதிரி சாதுர்யமான குழந்தைகளுடன் நாடகப்படி எந்த சாதுர்யம் நடக்கிறது?

சொர்க்கத்தின் அதிகாரியாகவோ அனைவரும் ஆகி விடுகிறார்கள் ஆனால் இராஜ்யத்தில் வரிசைக்கிரமமாகவோ இருக்கவே தான் இருக்கிறார்கள் இல்லையா. சொர்க்கத்தின் ஆஸ்தியை தந்தை அனைவருக்கும் கொடுக்கிறார் ஆனால் பதவி ஒவ்வொருவருக்கும் அவர்களின் வரிசை எண் பிரகாரம் இருக்கிறது. அப்படி நாடகப்படி எப்படி முயற்சியோ அப்படி பதவி தானாகவே பிராப்தி ஆகி விடுகிறது. தந்தை வரிசை எண்ணை உருவாக்குவதில்லை, யாருக்காவது இராஜாவிற்கான மற்றும் வேறு யாருக்காவது பிரஜைக்கான ஞானத்தை தனித்தனியாகக் கொடுப்பதில்லை. யாருக்காவது சூர்ய வம்சம் மற்றும் வேறு யாருக்காவது சந்திரவம்சத்தின் தனித்தனியான படிப்பை படிப்பிப்பதில்லை. யாரையாவது மகாரதி (யானைப்படை ) மற்றும் வேறு யாரையாவது குதிரைப்படை என்ற முத்திரையை இடுவதில்லை ஆனால் நாடகப்படி எப்படி மற்றும் எவ்வளவு யார் செய்கிறார்களோ அந்த மாதிரியே பதவியை அடைகிறார். எனவே எப்படி பெறுவதில் சாதுர்யமானவர்களாக ஆகிறீர்களோ அதே போல் கொடுப்பதிலும் சாதுர்யமானவர் களாக ஆகுங்கள். வெகுளியாக ஆகாதீர்கள். மாயாவின் சாதுர்யத்தைத் தெரிந்து மாயாவை வென்றவர் ஆகுங்கள். ஒரு யதார்த்த புகலிடத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது அற்ப காலத்தின் புகலிடமோ இதுவரையிலும் இருந்து விடவில்லையே என்று சோதனை செய்யுங்கள். அங்கு விரும்பாவிட்டாலும் கூட புத்தி சென்று கொண்டிருக்கிறதா? புத்தி செல்கிறது என்றால் வேறு புகலிடம் இருக்கிறது என்பதாகும். எனவே அனைத்து எல்லைக்குட்பட்ட புகலிடங்களை சோதனை செய்து இப்பொழுது அகற்றி விடுங்கள். இல்லையென்றால் இதே புகலிடம் நிரந்தரமான உயர்ந்த புகலிடத்திலிருந்து தூரமாக்கி விடும். தந்தை இந்த மாதிரி செய்யுங்கள் என்று தெளிவாக ஸ்ரீமத் கொடுக்கிறார் ஆனால் குழந்தைகள் அப்படி என்பதை எப்படி என்பதில் மாற்றி விடுகிறார்கள். எப்படி என்பதை முடிவுகட்டி, எப்படி தந்தை நடத்திக் கொண்டிருக்கிறாரோ அப்படி நடக்கவும் நல்லது.

விளக்கொளிக்குச் சமமாக லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் நம்பர் ஒன் விட்டில் பூச்சிகளுக்கு, அனேக குழப்பங்களை முடிவுகட்டி சுயதரிசன சக்கரதாரியாக ஆகக்கூடிய, உலகின் அதிபதியாக ஆவதின் அதிகாரத்தை பிராப்தி செய்யக்கூடிய, தந்தையின் ஸ்ரீமத்படி ஒவ்வொரு

அடியையும் எடுத்து வைத்துக் கூடிய, அந்த மாதிரி ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு உயர்ந்த வருமானத்தை சேமிக்கக்கூடிய, எப்பொழுதும் அன்பிலேயே ஐக்கியமாகியிருக்கும் விட்டில்பூச்சிகளுக்கு தந்தை விளக்கொளியின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சொரூபமாகி கர்ம தத்துவத்தை புரிந்து நடந்து கொள்ளக்கூடிய கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!

அனேக குழந்தைகள் ஆவேசத்தில் வந்து அனைத்தையும் விட்டு விட்டு தன்னை விலக்கி உடலால் தனியாகி விடுகிறார்கள் ஆனால் மனதின் கணக்கு வழக்கு இருக்கும் காரணத்தினால் ஈர்த்துக் கொண்டே இருக்கிறது. புத்தி சென்று கொண்டே இருக்கிறது, இதுவும் ஒரு பெரிய தடை ஆகி விடுகிறது. எனவே யாரிடமிருந்தாவது விலக வேண்டும் என்றிருந்தாலும் கூட முதலில் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களிடமிருந்து சரிபார்த்து பின்பு செய்யுங்கள். ஏனென்றால்,இது கர்மங்களின் தத்துவம் ஆகும். வலுக்கட்டாயமாக துண்டிப்பதினால் மனம் அடிக்கடி சென்று கொண்டே இருக்கும். எனவே ஞான சொரூபமானவராகி கர்ம தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். மேலும் சரி பார்த்துக் கொண்டீர்கள் என்றால் சுலபமாக கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டு விடுவீர்கள்.

சுலோகன்: தன்னுடைய சுவமானத்தின் ஆசனத்தில் நன்றாக அமர்ந்து கொண்டீர்கள் என்றால் மாயா உங்கள் எதிரில் சமர்ப்பணமாகி விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.02.1976-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பக்தர்கள் மற்றும் பாண்டவர்களின் வரவு செலவு கணக்கு!

இன்று பாப்தாதா தன்னுடைய மூன்று விதமான குழந்தைகளின் வரவு செலவு கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். மூன்று விதமானவர்கள் யார்? ஒன்று முகவம்சாவளி பிராமணர்கள், யார் பாப்தாதாவுடன் சேர்ந்து புது உலக ஸ்தாபனை காரியத்தில் சகயோகியாக இருக்கிறார்களோ அவர்கள். இரண்டாவது -பாப்தாதாவின் மற்றும் பிராமணர்களின் நினைவில் மற்றும் அவர்களை அழைப்பதில் எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருக்கும் பக்தர்கள். மூன்றாவது பழைய உலகை மாற்றம் செய்வதற்காக பொறுப்பாகியிருக்கும் யாதவர்கள். இந்த மூவரின் சம்மந்தத்தினால் ஸ்தாபனையின் காரியம் நிறைவடைய வேண்டும். எனவே மூவர்களின் காரியத்தின் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படி என்ன பார்த்தோம்? காரியத்திற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் மூன்று விதமான குழந்தைகளும் அவரவர்களின் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டோ அவசியம் இருந்தார்கள் ஆனால் மூன்று காரியம் செய்பவர்களின் காரியத்தில் எதுவரை மிக அதிக தீவிரம் வரவில்லையோ அதுவரை முடிவு ஏற்பட முடியாது ஏனென்றால் முடிவின் அடையாளம் மிக அதிக தீவிரம் இருப்பது. மூவரிலும் காரியத்தின் ஃபோர்ஸ் (சக்தி) இருக்கிறது ஆனால் முழுமையான ஃபோர்ஸ் தான் காரியத்தின் கோர்ஸை (செயல்பாடுகளை) முடிவடையச் செய்யும்.

பக்தர்களின் கணக்கில் பக்தியின் அற்ப கால பலனாக பக்தர்களுக்கு என்ன கிடைக்கிறதோ அதில் 75-சதவிகித பக்தர்கள் தன்னுடைய பெயர், புகழ், மரியாதைக்காக மட்டும் சுயநல சொரூபத்தின் பக்தர்கள் ஆவார்கள். எனவே அவர்கள் செய்யும் காரியத்தின் பலனின் கணக்கு முடிவடைந்து இருக்கிறது. தந்தைக்கு பலன் கொடுப்பதற்கான அவசியம் இல்லை. மீதமிருக்கும் 25-சதவிகித பக்தர்கள்

# 1976 அவ்யக்த முரளி

வரிசைக்கிரமமான ஈடுபாட்டின் பிரகாரம் பக்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பக்தியின் பலன் இதே பழைய உலகத்தில் பிராப்தி ஆக வேண்டும். ஏனென்றால் பக்தியின் கணக்கு இப்பொழுது அரைக்கல்பத்திற்காக முடிவடைய வேண்டும். அவர்களுடைய நிலையாக என்ன பார்த்தோம் என்றால், இப்பொழுது செய்தார்கள், மேலும் இப்பொழுதே கிடைத்தது. அதாவது அற்பகால ஈடுபாட்டின் பலன், இப்பொழுதே அற்பகாலத்தில் பிராப்தி ஆகி விடுகிறது. எதிர்காலத்திற்காக சேமிப்பு ஆவதில்லை. பக்தர்களின் பிராப்தியின் ரூபமாக எப்படி மழை காலத்தில் எறும்புகளுக்கு இறக்கை முளைத்து விடுமோ மேலும் அவை மிகவும் குஷியோடு பறக்க ஆரம்பித்து விடும் என்பது போல் இருந்தது ஆனால் அந்த அற்பகாலத்தில் பறந்து செல்வது அதே சீசனிலேயே அவர்களை அழித்து விடுகிறது. அங்கேயே பிராப்தி மற்றும் அங்கேயே முடிவு அதே போலவே இப்பொழுதைய பக்தர்கள் அதாவது கலியுக தமோபிரதான பக்தர்கள் அற்ப கால பலனின் பிராப்தியில் குஷி ஆகுபவர்கள். எனவே அவர்களுடைய பலனின் பிராப்தியின் காரியம் நாடகப்படி முடிவடைந்தே இருக்கிறது. 5 சதவிகித பிராப்தியின் காரியம் மட்டும் இப்பொழுது மீதம் இருக்கிறது. இப்பொழுது மிக அதிக அதாவது ஃபுல் ஃபோர்ஸில் கதறுவார்கள். அதிலேயியும் விசேஷமாக சக்திகளை "வரதானம் கொடுங்கள், சக்தி கொடுங்கள். துணிச்சல் மற்றும் தைரியத்தைக் கொடுங்கள்" என்று அழைப்பார்கள். இப்பொழுது இது மிக அதிகத்தில் சென்று பிறகு முடிவடையப் போகுபவை. அப்படி பக்தர்களின் கணக்கின் பதிவேடு முடிந்தே இருக்கிறது. மேலும் கொஞ்சம் இருப்பதும் இப்பொழுது காரியம் செய்தார்கள் மற்றும் உடனே பலன் கிடைத்தது என்ற ரூபத்தில் முடிவடைந்தே விடும். இது தான் பக்தர்களின் செய்தி.

இரண்டாவது யாதவ சேனையின் செய்தி. அவர்களுடைய கணக்கில் என்ன பார்த்தோம்? ஒவ்வொரு அடியிலும் பல கேள்விக்குறிகளைப் பார்த்தோம். வேகத்தை அதிகரிப்பதற்காக சாதகப் பறவைக்குச் சமமானவர்களை அதிகமாக பார்த்தோம் ஆனால் எவ்வளவு வேகத்தை அதிகரித்தாலும், அந்த அளவே கேள்விக்குறியின் சுவர் அடிக்கடி வரும் காரணத்தினால் வேகத்தை அதிகப்படுத்த முடிவதில்லை. கேள்விக்குறி எது? ஒன்றோ தொடங்குவது யார் நான் செய்வதா அல்லது அவர்கள்

செய்வார்களா? இரண்டாவது இப்பொழுது செய்யவா அல்லது எப்பொழுது செய்வது? மூன்றாவது இதனுடைய ரிசல்ட்டாக என்ன இருக்கும்? இந்த நேரம் கோப அக்னி சுடர்விட்டு எரிகிறது, பிறகு எப்பொழுதாவது "என்னவாகும்" என்ற எண்ணம் என்ற நீர்த் துளிகள் அக்னியை சீதளமாக்கி விடுகிறது. நான்காவது கேள்வி, இவை அனைத்தையும் செய்விப்பவர் யார், தூண்டுதல் செய்விப்பவர் யார்? இதில் குழப்பம் அடைந்து விடுகிறார்கள். அதனுடைய நிலைமையாக என்ன பார்த்தோம்? தன்னைத் தானே புரிந்து கொள்வதில்லை. மிகத்தெளிவான நிலை மற்றும் உணர்ச்சி வசப்படுதல் இந்த இரண்டு விதமான எண்ணத்தில் இருக்கிறார்கள். எனவே தன் மேலேயே குழப்பம் அடைந்து விடுகிறார்கள். ஏகாந்தவாசியாக ஆக விரும்புகிறார்கள் ஆனால் புத்தி ஒருநிலைப்படுவதில்லை எனவே அடிக்கடி உணர்ச்சி வசப்படுதலில் வந்து விடுகிறார்கள். மிக வேகமாக திட்டம் போடுகிறார்கள், முழு ஏற்பாடுகளையும் செய்கிறார்கள், நேரம், படை, ஆயுதம் மற்றும் இடம் அனைத்தையும் முடிவு செய்து விடுகிறார்கள். இப்பொழுதே நடந்து விடும் என்று அப்படியும் நினைக்கிறார்கள். மிக வேகமாக ஏற்பாடுகள் செய்வதில் இருக்கிறார்கள் ஆனால் நடைமுறையில் கடைசி நேரத்தில் குழப்பம் என்ற சிக்னல் போடப்பட்டு விடுகிறது. எனவே அவர்களுடைய தயார் செய்வதில் தூண்டுதல் செய்பவரின் தூண்டுதலின் ஒரு விநாடிக்கான வித்தியாசம் இருக்கிறது. ஏற்பாடுகள் இருக்கின்றன ஆனால் அந்த ஒரு விநாடியின் காத்தலில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை ஒரு விநாடி வரை வந்து சேர்ந்தது. ஏற்பாடுகளை முடித்து விட்டு காத்திருத்தலில் இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய கணக்கில் முழுமையான ஏற்பாடுகளைப் பார்த்தோம். இப்பொழுது இன்னும் தரமுள்ளதாக ஆக்க வேண்டும். இந்த ஒரு காரியத்தில் தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் தன்னுடைய விவேகம் மூலமாக தன்னுடைய ஏற்பாடுகளின் முடிவை செய்து கொண்டிருக்கிறார்கள். முடிப்பதற்கான ஒரு கோப்பு மிச்சம் இருக்கிறது. இது தான் யாதவர்களின் செய்தியாக இருந்தது. இப்பொழுது உங்களைப் பற்றி கேட்பதற்கான இச்சை இருக்கிறதா?

தூண்டுதலைப் பெறுபவர்களோ தயாராக இருக்கிறார்கள் ஆனால் தூண்டுதல் கொடுப்பவர்களின் நிலை என்னவாக இருக்கிறது?

# 1976 அவ்யக்த முரளி

"கொடுப்பவர் கொடுக்கட்டும், பெறுபவர் களைப்படைந்து விடட்டும்" என்ற பழமொழியின்படி இருக்கிறது ஆனால் இந்த விஷயத்தில் பெறுபவர்கள், கிடைக்காத காரணத்தினால் களைப்படைந்து கொண்டிருக்கிறார்கள். பெறுபவர்கள், பெறுவதற்காக தயாராக இருக்கிறார்கள் ஆனால் கொடுப்பவர்கள் தன் மேலேயே கவனம் வைத்து இதுவரையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பிரம்மா முகவம்சாவளி பிராமணர்களின் கணக்காக என்னயிருந்தது? அதைத் தெரிந்திருக்கிறீர்களா அல்லது கூறலாமா? பிராமணர்களின் பதிவேட்டில் விசேஷமாக என்ன பார்த்தோம்? உலக மாற்றம் மற்றும் உலக நன்மைக்கான சுபபாவனை பெரும்பான்மையோரிடம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது ஆனால் சென்று கொண்டிருக்கும்போதே எப்படி யாதவர்களின் வேகம் கேள்விக்குறியின் காரணமாக தீவிரமாக ஆவதில்லை. அதே போல் பிராமணர்களின் உயர்ந்த பாவனையில் பிரத்யக்ஷ பலன் பிராப்தி ஆக வேண்டியது தான் ஆகிறது என்றால் இடையில் ஏதாவது ராயல் ரூபத்தின் விருப்பம் சுபவிருப்பங்களை உள்ளடக்கி விடுகிறது. அப்படி பிராமணர்களின் நிலையில் சுபபாவனை மற்றும் ராயல் ரூபத்தின் விருப்பம் இந்த இரண்டின் கண்கட்டு வித்தை நடந்து கொண்டிருக்கிறது. எப்படி பழுத்த பழத்தை பறவைகள் அருந்தி விடுகின்றன. அதே போல் பாவனை யினால் பிராப்தியாகியிருக்கும் பழத்தை (பலனை) விருப்பம் என்ற பறவை அருந்தி விடுகிறது. அப்படி பிராமணர்களின் பரிவர்த்தனை செய்யும் விதி சித்தி சொரூபம் ஆகாத காரணத்தினால் பாவனை மாறி 'காமனா' (விருப்பங்கள்) ஆகி விடுகிறது. எனவே முயற்சி செய்வது ஜூவாலா ரூபமாக இருப்பதில்லை. பிராமணர்களின் ஜுவாலா ரூபம், விநாஷ ஜுவாலையை சுடர்விட்டு எரியச் செய்யும். எனவே பிராமணர்களின் கணக்கில் இப்பொழுது கடைசியில் மிக வேகமாகச் செய்யும் முயற்சி ஜுவாலா ரூபமாக இருக்க வேண்டும் என்பது இன்னும் ஆகவில்லை. யாதவர்களின் காரியம் முடிவடைந்த மாதிரியே தான், பாண்டவர்களின் காரியம் நிறைவேறப் போகிறது. பாண்டவர்களின் காரணமாக யாதவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். பாண்டவர்களின் உயர்ந்த கௌரவம், ஆன்மீக கௌரவத்தின் நிலை யாதவர்களின் குழப்பமான சூழ்நிலையை முடிவடையச் செய்யும். எனவே தன்னுடைய கௌரவத்தினால் குழப்பமான ஆத்மாக்களுக்கு

அமைதி மற்றும் நிம்மதியின் வரதானத்தைக் கொடுங்கள். புரிந்ததா? மூவரின் கணக்கை கேட்டீர்களா? நல்லது.

அந்த மாதிரி ஜுவாலா சொரூப அனைத்து அழியும் விருப்பங்களை உயர்ந்த பக்கம் சுபபாவனையில் மாற்றம் செய்யும், பக்தர்களுக்கு அற்ப காலத்து கடைசி பலனை மகாதானி, வரதானி ரூபத்தில் கொடுக்கக்கூடிய, வள்ளல் மற்றும் வரமளிக்கும் வள்ளல் தந்தைக்குச் சமமாக கொடுக்கக்கூடிய, மற்றும் அனைவரின் மனவிருப்பங்களை நிறைவேற்றக்கூடிய சம்பூர்ண பரிஷ்தா ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 02.02.1976-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தையின் அன்பிற்குரியவர் ஆவதின் அடையாளம் -ஃபரிஷ்தா சொரூபம் ஆவது!

எப்பொழுதும் தன்னுடைய எதிர்காலம் எதிரில் இருக்கிறதா? பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் எவ்வளவு தன்னுடைய எதிர்காலத்தை எப்பொழுதும் எதிரில் வைப்பார்களோ அந்த அளவு மற்ற ஆத்மாக்களுக்கும் தன்னுடைய எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய தூண்டுதலைக் கொடுக்க முடியும். தன்னுடைய எதிர்காலம் தெளிவாக இல்லை என்றால் மற்றவர்களுடையதையும் தெளிவாக ஆக்குவதற்கான வழியைக் கூற முடியாது. உங்களுடைய எதிர்காலம் தெளிவாக இருக்கிறதா? மகாராஜா அல்லது மகாராணி அப்படி எதுவாக ஆனாலும், ஆனால் அதற்கு முன்பு தன்னுடைய எதிர்கால ஃபரிஷ்தா ஆவதின், கர்மாதீத் நிலையை அடைவது, இது எதிரில் தெளிவாக வருகிறதா? நான் ஒவ்வொரு கல்பத்திலும் ஃபரிஷ்தா சொரூபத்தில் இந்த பங்கைச் செய்திருந்திருக்கிறேன் மற்றும் இப்பொழுது செய்ய வேண்டும் என்று அப்படி அனுபவம் ஆகிறதா? அந்த பொலிவு எதிரில் வருகிறதா? எப்படி கண்ணாடியில் தன்னுடைய சொரூபத்தின் பொலிவைப் பார்க்கிறீர்களோ அதே போல் ஞானத்தின் கண்ணாடியில் தன்னுடைய முயற்சியினால் ஃபரிஷ்தா நிலையின் பொலிவு தெளிவாகத் தென்படுகிறதா? எதுவரை ஃபரிஷ்தா நிலையின் பொலிவு தெளிவாகத் தென்படவில்லையோ அது வரை எதிர்காலமும் தெளிவாக ஆகாது. நான் ஒருவேளை இந்த மாதிரி ஆவேனா அல்லது அந்த மாதிரி ஆவேனா? என்ற இந்த எண்ணம் வந்து கொண்டே இருக்கும் ஆனால் ஃபரிஷ்தா நிலையின் பொலிவு தெளிவாக தென்பட்டது என்றால் அதுவும் தென்படும். அப்படி அது தென்படுகிறதா அல்லது இப்பொழுது முந்தானைக்குள் மறைந்திருக்கிறதா? எப்படி படங்களின் திறப்புவிழா செய்விக்கிறீர்கள் என்றால் தன்னுடைய ஃபரிஷ்தா சொரூபத்தின் திறப்புவிழாவை எப்பொழுது செய்வீர்கள்? நீங்களே செய்வீர்களா அல்லது சிறப்பு விருந்தினரை அழைப்பீர்களா? இந்த முயற்சி

செய்வதின் பலவீனத்தின் திரை அகன்றது என்றால் தெளிவான ஃபரிஷ்தா ரூபம் ஆகி விடும். இப்பொழுதோ நடைமுறையில் எப்படி சாகார பாபாவைப் பார்த்தீர்கள். போகும்பொழுதும் வரும்பொழுதும் ஒன்றோ ஃபரிஷ்தா ரூபத்தின் அல்லது எதிர்கால ரூபத்தின் அனுபவம் ஆனது அப்பொழுது தான் மற்றவர்களுக்கும் ஆனது, அந்த மாதிரி உங்களுக்கும் அனுபவம் ஆகிறதா? நான் டீச்சர், நான் சேவாதாரி என்ற இதுவோ எப்படி நேரமோ அப்படி சொரூபம் ஆகி விடுகிறது. இப்பொழுது தன்னை ஃபரிஷ்தா ரூபத்தில் அனுபவம் செய்தீர்கள் என்றால் சாட்சாத்காரம் ஏற்படும். சாட்சாத்காரத்தின் ரூபம் எது? ஃபரிஷ்தா ரூபம் ஆவது. போகும்பொழுதும் வரும்பொழுதும் ஃபரிஷ்தா சொரூபம். ஒருவேளை சாட்சாத் ஃபரிஷ்தா ஆகவில்லை என்றால் சாட்சாத்காரம் எப்படி செய்விக்க முடியும்? அப்படி டீச்சர்களுக்காக இப்பொழுது செய்ய வேண்டிய விசேஷ முயற்சி எது? நான் ஃபரிஷ்தா இந்த சாகார உலகத்தில் சேவைக்காக வந்திருக்கிறேன் என்ற இது தான். ஃபரிஷ்தாக்கள் வெளிப்படுகிறார்கள், பிறகு மறைந்து விடுகிறார்கள். ஃபரிஷ்தாக்கள் எப்பொழுதும் இந்த சாகார உலகத்தில் இருப்பதில்லை. காரியம் செய்வார்கள், மறைந்து விடுவார்கள். எனவே எப்பொழுது அந்த மாதிரி ஃபரிஷ்தா ஆவீர்களோ அப்பொழுது இந்த உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவுகள் மற்றும் பழைய உலகத்தில் கால்கள் பதியாது. நாங்கள் தந்தையின் அன்பிற்குரியவர்கள் என்று கூறுகிறீர்கள் என்றால், தந்தையோ சூட்சுமவதனவாசி மேலும் நீங்கள் முழு நாளும் ஸ்தூல வதனவாசியாக இருந்தீர்கள் என்றால் அன்பிற்குரியவராக எப்படி ஆவீர்கள்? எனவே சூட்சும வதனவாசி ஃபரிஷ்தாவாக ஆகுங்கள். அனைத்து ஈர்ப்புகள் அல்லது பற்றுதல்களின் உறவுகள் மற்றும் வழிகளை மூடுங்கள் அப்பொழுது தான் நீங்கள் அன்பிற்குரியவர்கள் மற்றும் அன்பானவர்கள் என்று கூறுவோம். இங்கே இவ்வுலகில் இருந்தபோதிலும் இல்லாமல் இருப்பது, இது தான் கடைசி நிலை. விசேஷமாக சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள் என்றால் முயற்சி செய்வதிலும் விசேஷம் இருக்க வேண்டும். எப்பொழுது மற்றவர்களுக்கும் நீங்கள் போகும் போதும் வரும்போதும் இவர்கள் ஃபரிஷ்தாக்கள் என்று அனுபவம் ஆகுமோ, அப்பொழுது தான் மற்றவர்களும் பிரேரணையை எடுக்க முடியும். ஒருவேளை சாகார உலகத்தின் நினைவிலிருந்து விலகி விட்டீர்கள் என்றால் சின்ன சின்ன விஷயங்களில் நேரத்தை வீணாக்குகிறீர்கள் இல்லையா, அது

இருக்காது. எனவே இப்பொழுது ஹை ஜம்ப் (உயரே தாண்டுதல்) செய்யுங்கள். சாகார உலகத்திலிருந்து முற்றிலும் ஃபரிஷ்தாக்களின் உலகத்தில் மற்றும் ஃபரிஷ்தா சொரூபத்தில் சென்று விடுவது -இதைத் தான் ஹை ஜம்ப் என்று கூறுவது. எனவே சின்ன சின்ன விஷயங்கள் இருந்தால் அழகல்ல. இது தான் தந்தையின் விசேஷ பரிசாகும். பரிசைப் பெறுவது என்றால் ஃபரிஷ்தா சொரூபம் ஆவது. அப்படி தந்தையும் இந்த ஃபரிஷ்தா சொரூப படத்தைப் பரிசாகக் கொடுக்கிறார். இந்த பரிசினால் பழைய விஷயங்கள் அனைத்தும் முடிந்து விடும். ஏன் மற்றும் என்ன என்று மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டே இருக்காதீர்கள். நிர்ணய சக்தி, பகுத்தறியும் சக்தி, பரிவர்த்தனை (மாறும்) சக்தி -எப்பொழுது இந்த மூன்று சக்திகளும் இருக்கும் என்றால் தான் ஒவ்வொருவருக்கும் குஷியான செய்தியைக் கூறுவீர்கள். ஒருவேளை தன்னில் பரிவர்த்தனை இல்லை என்றால் மற்றவர்களிலும் பரிவர்த்தனையைக் கொண்டு வர முடியாது.

**கேள்வி: எந்த ஒரு திட்டத்தையும் நடைமுறையில் கொண்டு வருவதற்கு விசேஷமாக எந்த சக்தியின் அவசியம் இருக்கிறது?**

பதில்: பரிவர்த்தனை (மாற்றம் கொண்டு வருவது) செய்வதின் சக்தி. எது வரை பரிவர்த்தனை செய்வதின் சக்தி இல்லையோ அது வரை நிர்ணயம் செய்ததையும் நடைமுறையில் கொண்டு வர முடியாது. ஏனென்றால், ஒவ்வொரு இடத்தில், ஒவ்வொரு நிலையில், அது தனக்கானதாகவும் மற்றும் சேவைக்கானதாகவும் இருந்தாலும் அவசியம் பரிவர்த்தனை செய்ய வேண்டியது இருக்கிறது. எப்படி வெற்றி அடைபவராக ஆக வேண்டுமானால் சம்ஸ்காரம் மற்றும் சுபாவத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டியதாக இருக்கிறது, அதே போலவே சேவையில் தன்னுடைய கருத்துக்களை எங்காவது பரிவர்த்தனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. பரிவர்த்தனை சக்தி உள்ளவர், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வெற்றி அடைந்து விடுகிறார். ஏனென்றால் அவர் பஹுரூபி (சூழ்நிலைக்கு ஏற்றபடி பல ரூபங்களை தாரணை செய்வது) ஆக இருப்பார். திட்டத்தை சேவையில் கொண்டு வருவார் மற்றும் ஞான பாயின்டுகளை (விஷயங்களை) நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவார், இரண்டிற்காகவும் பரிவர்த்தனை செய்வதின் சக்தி தேவையாக இருக்கிறது. ஞானம் நிறைந்தவர் ஆன

காரணத்தினால் இது நடக்க வேண்டும் என்ற இதையோ நிர்ணயம் செய்து விடுகிறார்கள் ஆனால் பரிவர்த்தனை ஆவதில்லை. இதற்கான காரணம் பரிவர்த்தனை சக்தியின் குறை. யாரிடம் பரிவர்த்தனை சக்தி இருக்கிறதோ அவர் அனைவரின் அன்பிற்குரியவராக இருப்பார். மேலும் எப்பொழுதும் வெற்றியும் அடைவார். எண்ணத்தில் உறுதித்தன்மையை கொண்டு வருவதினால் பிரத்யக்ஷ பலன் கிடைத்து விடுகிறது. பரிவர்த்தனை செய்து வெற்றி அடைபவராக ஆகத்தான் வேண்டும் என்ற இது தான் திட எண்ணமாகும். வெற்றி வெற்றி அடைபவரை ஆவஹானம் செய்து கொண்டிருக்கிறது என்றால் வெற்றி அடைபவர் வந்தால் தானே, நான் (வெற்றி) அவருடைய கழுத்தின் மாலையாக ஆவேன். நல்லது.

வரதானம்: உயர்ந்த காரியம் என்ற கிளையில் தொங்குவதற்குப் பதிலாக பறக்கும் பறவை ஆகக்கூடிய கதாநாயக பாத்திரம் உள்ளவர் ஆகுக!

சங்கமயுகத்தில் உயர்ந்த காரியம் என்ன செய்கிறீர்களோ, இந்த உயர்ந்த காரியம் வைரத்தின் கிளை ஆகும். சங்கமயுகத்தின் எப்படிப்பட்ட உயர்ந்த காரியமாக இருந்தாலும் ஆனால் உயர்ந்த காரியத்தின் பந்தனத்திலும் மாட்டிக் கொள்வது மற்றும் எல்லைக்குட்பட்ட விருப்பம் வைப்பது என்பது தங்கச் சங்கிலியாகும். இந்த தங்கச் சங்கிலி மற்றும் வைரக் கிளையிலும் தொங்கக்கூடாது. ஏனென்றால் பந்தனமோ பந்தனம் தான். எனவே பாப்தாதா பறக்கும் பறவைகளுக்கு நினைவூட்டுகிறார். அனைத்து பந்தனங்கள் அதாவது எல்லைகளை கடந்து சென்று ஹீரோ பாத்திரம் உடையவர் ஆகுங்கள்.

சுலோகன்: உள் மனநிலையின் கண்ணாடி முகம் ஆகும், எனவே முகம் ஒருபொழுதும் வாடிப்போய் இருக்க வேண்டாம், குஷியுடையதாக இருக்கட்டும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 03.02.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தர்மம் மற்றும் கர்மத்தின் (காரியத்தின்) இணைந்த ரூபம்!

இன்றைய உலகில் தர்மம் மற்றும் கர்மம் -இரண்டுமே விசேஷமாக வர்ணனை செய்யப்படுகிறது. தர்மம் மற்றும் கர்மம் -இந்த இரண்டுமே அவசியமாகும் ஆனால் தற்சமயம் தர்மத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக, கர்மம் செய்பவர்கள் தனியாக ஆகிவிட்டார்கள். கர்மம் செய்பவர்கள் காரியம் செய், தர்மத்தின் விஷயத்தைப் பேசாதீர்கள் என்று கூறுகிறார்கள். மேலும் தர்மத்தைச் சேர்ந்தவர்கள் நாங்களோ கர்ம சன்னியாசியாகத் தான் இருக்கிறோம் என்று கூறுகிறார்கள் ஆனால் சங்கமயுகத்தில் பிராமணர்கள் தர்மம் மற்றும் கர்மத்தை இணைக்கிறார்கள். எனவே முழு நாளில் தர்மம் மற்றும் கர்மம் இணைந்த ரூபத்தில் இருக்கிறதா? தர்மத்தின் அர்த்தம் தெய்வீக குணங்களை தாரணை செய்வது. அனைத்து விதமான தாரணைகள் அதாவது ஞான சொரூபத்தின், தெய்வீக குணங்களின் மற்றும் நினைவு சொரூபத்தின் தாரணை. எந்த விதமான தாரணையையும் தர்மம் என்று கூறுகிறார்கள். எனவே முழு நாளில் எப்படிப் பட்ட பொறுப்பான காரியமாக இருந்தாலும், ஸ்தூல காரியமாக இருந்தாலும், சாதாரண காரியமாகவோ அல்லது பத்தியை ஈடுபடுத்தும் காரியமாக இருந்தாலோ, அந்த ஒவ்வொரு காரியத்திலும் தாரணை அதாவது கர்மம் மற்றும் தர்மம் இணைந்திருக்கிறதா? பெரும்பான்மையோரின் ரிசல்ட் என்னவாக இருக்கிறது? எப்படி ஒரு உறையில் இரண்டு வாள்கள் இருக்க முடியாது என்ற பழமொழி இருக்கிறது. மேலும் ஒரு கையில் இரண்டு லட்டுகள் வராது ஆனால் சங்கமயுகத்தில் அசம்பவமான விஷயம் கூட சம்பவமாகிவிடுகிறது. இங்கு ஒரே நேரத்தில் இரண்டு விஷயங்களும் சேர்ந்தே இருக்கிறது. தர்மமும் இருக்க வேண்டும் மற்றும் கர்மமும் இருக்க வேண்டும்". இதற்கான பயிற்சியைத் தான் கற்றுக் கொடுக்கிறார். சங்கமயுகம் விசேஷமான யுகம் ஏனென்றால் என்னென்ன விசேஷங்கள் வேறு யுகங்களில்

இருக்க முடியாதோ அந்த அனைத்து விசேஷங்களும் சங்கமயுகத்தில் இருக்கிறது! எனவே இதை 'விசேஷ யுகம்" என்று கூறுவது. அப்படி யார் இந்த விஷயத்தின் இணைந்த ரூபத்தின் பயிற்சி உள்ளவராக இருப்பாரோ அவர் தான் சங்கமயுகத்தின் இணைந்த ரூபமான - தந்தை மற்றும் குழந்தை, மேலும் பிராப்தியினுடைய இணைந்த ரூபமான ஸ்ரீ லட்சுமி மற்றும் ஸ்ரீ நாராயணன் இந்த இரண்டு இணைந்த ரூபத்தின் அனுபவி ஆக முடியும். அவர் அதிகாரி ஆக முடியும். அப்படியானால் இரண்டுமே சேர்ந்தே இருக்கிறதா? பெரும்பான்மையோருக்கு இருக்கிறதா அல்லது இல்லையா? என்ன ரிசல்ட் என்று நினைக்கிறீர்கள்? அனைவரும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது இது நிரந்தரமான இணைந்த ரூபம் ஆகி விடுமோ அப்பொழுது தான் பிராப்தியின் இணைந்த ரூபம் ஆகிய ஸ்ரீ லட்சுமி நாராயணனின் தாரணை செய்ய முடியும். காரியத்தில் ஒருவேளை தர்மம் இணைந்திருக்கவில்லை என்றால் சாதாரண காரியமாக ஆகிவிட்டது இல்லையா. எனவே ஒவ்வொரு காரியத்திலும் தர்மத்தின் ரசனையை நிரப்ப வேண்டும். தர்மம் மற்றும் கர்மம் இரண்டும் இணைந்திருக்கிறதா? மேலும் தர்மத்தை ஒதுக்கி வைத்து விட்டு காரியம் செய்து கொண்டிருக்கிறேனா மற்றும் தர்மத்தின் நேரத்தில் காரியத்தை ஒதுக்கி வைத்து விடவில்லையே என்ற இந்த சோதனை செய்ய வேண்டும். இதுவுமே அனைத்தையும் துறந்ததாகி விட்டது. எப்படி துறவற மார்க்கத்தில் தனியாக இருக்கிறார்கள். இல்லற மார்க்கம் என்றால் இணைந்த ரூபம். எனவே தொடக்க பாகத்திலிருந்து இணைந்த ரூபமாக இருக்கிறீர்கள் என்றால் இல்லற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் முயற்சி செய்வதிலும் கூட இல்லறத்தின் முயற்சியாக இருக்கட்டும். துறவற மார்க்கத்தினுடையதாக இருக்க வேண்டாம், அதாவது தனியானதாக இருக்க வேண்டாம். எப்படி அவர்கள் விட்டுவிட்டு தனியாக சென்று விடுகிறார்கள். இதே முறையில் தர்மத்தை விட்டுவிட்டு காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் இதுவும் துறவற மார்க்கம் ஆகிவிட்டது. எனவே எப்பொழுதும் இல்லற மார்க்கம் இருக்கட்டும். அந்த மாதிரியான அனைவருடைய பயிற்சியும் எப்பொழுது நிறைவேறி விடுமோ அப்பொழுது நேரமும் முடிவடைந்து விடும். ஏனென்றால் இல்லற மார்க்கத்தின் சம்ஸ்காரத்தை முயற்சி செய்யும் வாழ்க்கையில் நிரப்ப வேண்டும். எனவே இப்பொழுதிலிருந்தே இந்த இணைந்த ரூபத்தின்

சம்ஸ்காரத்தை நிரப்பவில்லை என்றால் அங்கே எப்படி இருக்கும்? அதிசயமான இல்லற மார்க்கம் தான் இல்லையா? தர்மம் மற்றும் கர்மத்தின் இல்லற மார்க்கம் என்று கூறினாலும் அல்லது கர்மம் மற்றும் யோகாவின் இல்லற மார்க்கம் என்று கூறினாலும் விஷயம் ஒன்றாகவே ஆகி விட்டது. நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 06.02.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் சகயோகி -வலதுகரம் மற்றும் இடதுகரம்!

பாப்தாதா இன்று விசேஷமாக அனைத்துக் குழந்தைகளையும் தன்னுடைய சகயோகி ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தையின் சகயோகி சொரூபத்தின் தன்னுடைய நினைவுச் சின்னத்தை தெரிந்திருக்கிறீர்களா மற்றும் பார்த்திருக்கிறீர்களா? அது எது? சகயோகி சொரூபமானது புஜங்களின் ரூபத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எப்படி விசேஷமாக காரியம் செய்வது உடலின் புஜங்களாகுமோ அதே போல் பாப்தாதாவின் காரியத்தில் காரியம் செய்யும் பொறுப்பாளர் ரூபத்தில் நீங்கள் அனைத்து குழந்தைகளும் இருக்கிறீர்கள். எப்பொழுதும் தந்தையின் சகயோகி அதாவது தன்னை தந்தையின் புஜங்கள் என்று புரிந்து காரியம் செய்கிறீர்களா? புஜங்களிலும் வலது மற்றும் இடது இருக்கிறது. அதே போல் காரியத்திலும் எப்பொழுதும் யதார்த்த ரூபத்தில் துணையாக இருக்கும் துணைவர்களை மற்றும் உதவியாளர் களையும் இவர்கள் என்னுடைய வலதுகரங்கள் என்று கூறப்படுகிறது. அப்படி ஒன்று வலதுகரம், இன்னொன்று இடதுகரம் ஆனால் இருவருமே சகயோகிகள் தான் | எனவே சாகார பிரம்மாபாபாவின் அனேக புஜங்கள் பிரசித்தி ஆனது. வலதுகரம் என்று யாரைக் கூறுவது? அனைவருமே கரங்களாக இருக்கிறீர்கள். கரங்கள் இன்றி எந்தக் காரியமும் நிறைவேற முடியாது. எனவே இந்த சாகார உலகத்திலும் இந்தக் காரியத்தில் விரல் கொடுங்கள் அல்லது இந்தக் காரியத்தில் உதவிக்கரம் நீட்டுங்கள் என்ற ஒரு பழமொழியும் இருக்கிறது. அப்படி கை என்றால் புஜம் மற்றும் விரல், இது சகயோகத்தின் அடையாளம் ஆகும். நீங்கள் அனைவருமே சகயோகிகள் தான் ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்கள்.

வலது கரத்தின் விசேஷமானது எப்பொழுதும் தூய்மையான அதாவது சுத்தமானவராக மற்றும் உயர்ந்தவராக இருப்பார். எப்படி ஏதாவது

உயர்ந்த மற்றும் சுத்த காரியம் உடலின் வலதுகரம் மூலமாகத் தான் செய்யப்படுகிறது, அதே போல் பாப்தாதாவின் சகயோகி வலதுகரமாக இருப்பவர்கள் எப்பொழுதும் வார்த்தையில், செயலில் மற்றும் தொடர்பில் உயர்ந்த மற்றும் சுத்த அதாவது தூய்மையாக இருக்கிறார்கள், அதாவது எப்பொழுதும் உயர்ந்த காரியத்திற்காக தன்னை பொறுப்பாளர் என்று புரிந்து நடந்து கொள்கிறார்கள். எப்படி புஜங்கள் மூலமாக காரியம் செய்விக்கும் சக்தி ஆத்மாவாகும், புஜங்கள் செய்பவர்கள் மற்றும் ஆத்மா செய்விப்பது, அதே போலவே வலதுகரமாக இருக்கும் சகயோகி எப்பொழுதும் செய்விப்பவர் தன்னுடைய தந்தையை நினைவில் வைத்து பொறுப்பிலிருக்கும் செய்பவராக ஆகிறார். தன்னை செய்விப்பவர் என்று நினைப்பதில்லை, எனவே அவருடைய ஒவ்வொரு காரியத்திலும் விலகிய நிலை, அகங்காரமற்ற நிலை மற்றும் புது உலக படைப்பின் உயர்ந்த தன்மையாகிய பணிவுத் தன்மை போன்றவை நிரம்பியதாக இருக்கும். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணம் சம்பூர்ண பவித்ரமானதாக அதாவது சுத்தமானதாக இருக்கும் அதைத் தான் உண்மை மற்றும் தெளிவானது என்று கூறுகிறார்கள். வலதுகரமானவர்கள் விசேஷமாக சக்திசாலியாக இருப்பார்கள். பார்க்கப்போனால் ஏதாவது சுமையான ஒன்றைத் தூக்குவதற்கு வலதுகரம் மூலமாகத் தான் தூக்குவார்கள். அதே போல் வலதுகரமாக இருக்கும் சயோகி ஆத்மா எப்பொழுதும் உலக நன்மை, உலக மாற்றத்தின் காரியத்தின் பொறுப்பின் சுமை அதாவது பொறுப்பை மிக சுலபமான முறையில் தூக்க முடியும். அதாவது அவர்கள் தன்னை பொறுப்புள்ளவர் என்று அனுபவம் செய்வார்கள், எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திவானின் நிலையை அனுபவம் செய்வார்கள். வலதுகரத்தின் விசேஷமாக அவர்கள் செய்யும் காரியத்தின் வேகம் மிக அதிகமாக இருக்கும். அதே போலவே வலதுகரமாக இருக்கும் சகயோகி ஆத்மாவும் ஒவ்வொரு பாடத்தின் தாரணையை மற்றும் நடைமுறை சொரூபத்தைக் கொண்டு வருவதில் தீவிரமாக முயற்சி செய்பவராக இருப்பார், எப்பொழுதும் எவரெடியாக இருப்பார். இது தான் வலதுகரத்தின் விசேஷமாகும்.

இடதுகரம் சகயோகியாக எப்பொழுதும் இருக்கிறார்கள், ஆனால் தூய்மையின் கூடவே தூய்மையின்மை அதாவது எண்ணம், சொல் மற்றும் செயலில் சில நேரம் ஏதாவது அசுத்தமும் இருந்து விடுகிறது.

அதாவது முழுமையான தூய்மையானவர் இல்லை. முயற்சி செய்யும் வேகத்திலும் தீவிரத்தன்மை குறைவாக இருக்கும். செய்வார்கள், யோசிப்பார்கள், இடது என்றால் தாமதமாக செய்பவர்கள். உடன் இருப்பார்கள், காரியம் செய்வார்கள், ஆனால் முழுமையான பொறுப்பை எடுப்பதற்கு தைரியம் வைக்க மாட்டார்கள். எப்பொழுதும் உற்சாகம், தைரியம் வைப்பார்கள், ஆனால் ஆதாரமற்றவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களுடைய நிலை வெகுகாலம் வக்கீலினுடையதாக இருக்கும். சட்டத்தை அதிகமாக யோசிப்பார்கள், ஆனால் லாபத்தைக் குறைவாக அடைவார்கள். தனக்குத் தானே நீதிபதியாக ஆக முடியாது. ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் முடிவான தீர்ப்பிற்காக நீதிபதியின் அவசியத்தை அனுபவம் செய்வார்கள். வலதுகரமாக இருப்பவர்கள் சட்டப்படி நடப்பவர்களாக இருப்பார்கள், நீதிபதியாகவும் இருப்பார்கள் ஆனால் வக்கீலாக இருக்க மாட்டார்கள்.

இப்பொழுது நான் வலதுகரமா அல்லது இடதுகரமா என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். வக்கிலாக இருக்கிறேனா அல்லது சட்டப்படி நடப்பவனாக இருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். பாப்தாதாவிற்கோ இருவருமே சகயோகிகள் தான். எப்பொழுதும் தன்னை சகயோகி என்று நினைப்பதினால் சகஜயோகி ஆகி விடுகிறார்கள். செய்விப்பவர் பாப்தாதாவின் கருவியாக தன்னை செய்பவர் என்று புரிந்து நடந்து கொண்டால் எப்பொழுதும் கவலையற்றவராக மற்றும் மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பார்கள்.

அப்படி இன்று பாப்தாதா தன்னுடைய சகயோகி புஜங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவருமே புஜங்கள் தான் இல்லையா? அனைவரின் இதயத்தில் நாங்கள் அனைவரும் புது உலகப் படைப்பை செய்யக்கூடிய உலகத்தை மாற்றம் செய்பவர்கள் என்ற இந்த நல்ல எண்ணம் எப்பொழுதுமே இருக்கிறதா? உலக மாற்றத்திற்கு முன்பு தன்னை முழுமையாக மாற்றம் செய்திருக்கிறீர்களா? எவ்வளவு தன்னை மாற்றம் செய்வதில் குறை இருக்குமோ அந்த அளவு உலக மாற்றத்தின் வேகமும் குறைவாக இருக்கும். தன்னுடைய மாற்றத்தின் மூலமாகத் தான் நேரத்தின் மாற்றம் செய்ய முடியும். தன்னை பார்த்தீர்கள் என்றால் தானாகவே நேரத்தை தெரிந்து கொள்ள முடியும்.

மாற்றம் செய்வதின் நேரத்தின் கடிகாரம் நீங்களாவீர்கள். அப்படி தன்னுடைய கடிகாரத்தில் நேரத்தைப் பாருங்கள். முழு உலகத்தின் அதாவது அனைத்து ஆத்மாக்களின் கவனம் இப்பொழுது இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்று பொறுப்பாளர் ஆகியிருக்கும் நேரத்தின் கடிகாரமாகிய உங்கள் மேல் இருக்கிறது. எனவே இந்த பழைய உலகத்தின் நேரத்தை முடிவு செய்வதற்கு பொறுப்பாளராக தன்னை நினைத்துக் கொண்டே தன்னை முழுமையானவராக ஆக்குங்கள். புரிந்ததா? நல்லது.

அந்த மாதிரி உலக மாற்றம் செய்பவர், இரவை பகலில் மாற்றம் செய்பவர், பழையதை புதியதாக ஆக்குபவர், பாப்தாதாவின் உயர்ந்த சகயோகி அதாவது எப்பொழுதும் சகஜயோகி, அந்த மாதிரி எப்பொழுதும் உலகிற்கு சேவை செய்பவர், உலகிற்கு நன்மை செய்யும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்கள் சகோதரிகளுடன் -கனெக்ஷன் (தொடர்பு) மற்றும் கரெக்ஷனின் (சரி செய்தலின்) சமநிலை மூலம் அதிசயம்!** டீச்சர்களுக்கு விசேஷமாக இரண்டு விஷயங்களின் கவனம் வைக்க வேண்டும். அந்த இரண்டு விஷயங்கள் எவை? மதுபனுடன், தந்தையுடன் மற்றும் தெய்வீக பரிவாரத்துடன் மரியாதைப்பூர்வமான கனெக்ஷன் அதாவது தொடர்பு இருக்க வேண்டும். மரியாதைப்பூர்வமான கனெக்ஷன் என்றால் என்னென்ன எண்ணங்கள் மற்றும் காரியங்கள் செய்கிறீர்களோ அதை ஒவ்வொரு நேரமும் கரெக்ஷன் (சரி செய்தல்) செய்வதின் பயிற்சி உடையவராக இருக்க வேண்டும். இரண்டு விஷயங்கள் -ஒன்று சரியான கனெக்ஷன் மற்றும் இன்னொன்று ஒவ்வொரு நேரமும் தன்னுடைய ஒவ்வொரு கரெக்ஷன் செய்வதிலும் கவனம். ஒருவேளை இரண்டு விஷயங்களிலும் ஏதாவது ஒரு விஷயத்தின் குறை இருந்தாலும் வெற்றி அடைபவராக ஆக முடியாது. கரெக்ஷன் செய்வதற்காக எப்பொழுதும் சாட்சியாக இருக்கும் நிலை தேவையாக இருக்கிறது. ஒருவேளை சாட்சியாக இருந்து கரெக்ஷன் செய்யவில்லை என்றால் யதார்த்த கனெக்ஷன் வைக்க முடியாது. எனவே ஒவ்வொரு விஷயத்தில் ஒவ்வொரு நேரமும் கரெக்ஷன் செய்கிறேனா என்று இதை சோதனை செய்யுங்கள். ஒன்று புத்தியின்

கரெக்ஷன், அதைத் தான் நினைவின் யாத்திரை என்று கூறுகிறீர்கள். இரண்டாவது ஸ்தூல காரியத்தில் வந்து கொண்டும், சாகார பரிவாரம் மற்றும் சாகார சம்மந்தத்தின் கனெக்ஷனில் வருவது, இரண்டு கனெக்ஷனும் சரியாக இருக்க வேண்டும். சாகாரத்தில் கனெக்ஷனில் வருவதில் மரியாதைப் பூர்வமாக இருக்க வேண்டும். ஒருவேளை ஆன்மீகப் பரிவாரத்தின் கனெக்ஷன் ஆன்மீகத்திற்குப் பதிலாக ஒருவேளை தேக அபிமானத்தின் கனெக்ஷன் இருக்கிறது என்றால் அதுவும் யதார்த்த கனெக்ஷனாக ஆகவில்லை. யார் கரெக்ஷன் மற்றும் கனெக்ஷன் செய்யத் தெரிந்திருக்கிறாரோ அவர் எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருப்பார். அவருக்கு விலகியிருக்கும் நிலை மற்றும் அன்பாக இருக்கும் நிலையின் சமநிலை இருக்கும். பாருங்கள், எப்படி சமநிலையின் விளையாட்டை காண்பிப்பதற்காக சம்பாதிப்பதற்கான சாதனம் எவ்வளவு உருவாக்கியிருக்கிறார்கள் -அது தான் சர்க்கஸ். சமநிலையை அதிசய ரூபத்தில் காண்பிக்கிறார்கள் என்றால் இங்கேயும் ஒருவேளை சமநிலை இருக்கிறது என்றால் அதிசயமும் ஏற்படும் மற்றும் சம்பாத்தியமும் ஏற்படும். ஒருவேளை கொஞ்சமாவது குறைவாக அல்லது அதிகமாக ஆகி விட்டது என்றால் அதிசயமும் ஏற்படுவதில்லை, வருமானமும் ஏற்படுவதில்லை. எப்படி ஏதாவது உணவு பலகாரம் செய்கிறார்கள், ஒருவேளை அதில் அனைத்து பொருட்களின் சமநிலை இல்லை என்றால் எவ்வளவு தான் நல்ல பொருளாக இருந்தும் அதில் சுவை இருக்காது அப்படி தன்னுடைய வாழ்க்கையையும் உயர்ந்ததாக மற்றும் வெற்றிகரமாக ஆக்குவதற்காக சமநிலை வையுங்கள். இன்னொரு விஷயம் -எப்படி பிரச்சனையோ, எப்படி நேரமோ அப்படி தன்னுடைய சக்திசாலியான நிலையை உருவாக்க முடிய வேண்டியதிருக்கும். ஒருவேளை சூழ்நிலை எதிர்க்கக்கூடியதாக இருக்கிறது. என்றால் எதிர்கொள்ளும் சக்தியின் சொரூபமாக ஆகி விடுங்கள். ஒருவேளை சூழ்நிலை சகித்துக் கொள்வதற்கானதாக இருக்கிறது என்றால் சகித்துக் கொள்ளும் சக்தியின் சொரூபமாக ஆகி விடுங்கள் மாதிரியான பயிற்சி இருக்க வேண்டும். டீச்சர்கள் என்றாலே சமநிலை. எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை தாரணை செய்வதற்கான சக்தி இருக்கட்டும். அன்பிற்குப் பதிலாக ஒருவேளை சக்தியை தாரணை செய்கிறீர்கள் மற்றும் சக்திக்கு பதிலாக ஒருவேளை அன்பை தாரணை செய்கிறீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? அதாவது எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை

தாரணை செய்யும் சக்தி இல்லை. எனவே சேவையின் ரிசல்ட்டும் வருவதில்லை. மேலும் வெற்றியும் அடைவதில்லை. ஒருவேளை நம்பர் ஒன் டீச்சராக ஆக வேண்டும் என்றால் எந்தவொரு தாரணையையும் முதலில் தாங்கள் செய்யுங்கள், பின்பு மற்றவர்களுக்குக் கூறுங்கள். தான் செய்வதில்லை, ஆனால் மற்றவர்களுக்கு மட்டும் கூறுகிறீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். மற்றவர்களுக்கு என்ன டைரக்ஷன் கொடுக்கிறீர்களோ அதை முதலில் தன்னுள் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். சகித்துக் கொள்பவராக ஆகுங்கள் என்று மற்றவர் களுக்குக் கூறுகிறீர்கள் மற்றும் நீங்களே அப்படி இல்லை என்றால் அவர் டீச்சர் அல்ல. டீச்சர் என்றாலே ஆசிரியர் அதாவது படிப்பைக் கொடுப்பவர். ஒருவேளை தானே அந்த படிப்பின் சொரூபமாக இல்லை என்றால் அவரை யதார்த்த டீச்சர் என்று கூற முடியாது. ஆசிரியர் என்றால் கல்வி சொரூடம் மற்றும் சமநிலை வைப்பவர் என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது தரமுள்ள டீச்சராக ஆக வேண்டும். அதிக அளவின் மேல் உங்களுடைய பார்வை செல்ல வேண்டாம். தரமுள்ளவர் தான் அனைவரின் நன்மைக்கு பொறுப்பானவர் ஆக முடியும். எனவே இப்பொழுது டீச்சரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதில்லை ஆனால் தரத்தை அதிகரிக்க வேண்டும். புரிந்ததா?

வரதானம்: அன்பின் கடலில் மூழ்கி என்னுடையது என்பதின் அழுக்கை அகற்றக்கூடிய தூய்மையான ஆத்மா ஆகுக!

யார் எப்பொழுதும் அன்பின் கடலில் மூழ்கியிருக்கிறாரோ அவருக்கு உலகத்தின் எந்வொரு விஷயத்தின் உணர்வு இருப்பதில்லை. அன்பில் மூழ்கியிருப்பதின் காரணத்தினால் அவர்கள் அனைத்து விஷயத்திலிருந்தும் சுலபமாகவே விலகி விடுகிறார்கள். இவரோ தன்னையே மறந்திருக்கிறார் என்று பக்தர்களுக்காகக் கூறுகிறார்கள் ஆனால் குழந்தைகள் எப்பொழுதும் அன்பில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு உலகின் நினைவு இருப்பதில்லை, என்னுடையது. என்னுடையது என்ற அனைத்தும் முடிந்து விடுகிறது. அனேக என்னுடையது என்பது அழுக்காக்கி விடுகிறது, என்னுடையவர் ஒரு தந்தை என்றால் அழுக்கு முடிவடைந்து விடுகிறது. மேலும் ஆத்மா தூய்மையாகி விடுகிறது.

சுலோகன்: புத்தியில் ஞான இரத்தினங்களை கிரஹிப்பது மற்றும் கிரஹிக்க வைப்பது தான் புனித அன்னப்பறவை ஆவதாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.02.1976-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த பரிஷ்தாக்களின் சபை!

பாப்தாதா எப்பொழுதும் முகமலர்ந்திருக்கும். எப்பொழுதும் எல்லைக்குட்பட்ட ஈர்ப்புகளிலிருந்து விலகியிருக்கும் அவ்யக்த பரிஷ்தாக்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். இது பரிஷ்தாக்களின் சபை ஆகும். ஒவ்வொரு பரிஷ்தாவின் நாலாபுறமும் பரவி இருக்கும் ஒளியின் கிரீடம் எவ்வளவு தெளிவாகத் தென்படுகிறது அதாவது ஒவ்வொரு பரிஷ்தாவும் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸாக எவ்வளவு ஆகியிருக்கிறார்கள் என்று இதை இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எப்படி எதிர்காலத்து சொர்க்க உலகத்தில் அனைவருமே தேவதைகள் என்று அழைக்கப்படு கிறார்கள், அதே போல் தற்சமயம் சங்கமயுகத்தில் பரிஷ்தாக்களுக்குச் சமமாக அனைவரும் ஆகிறார்கள் ஆனால் வரிசைக்கிரமமாக. எப்படி அங்கே (சொர்க்கத்தில்) ஒவ்வொருவரும் தன்னுடைய நிலைக்கேற்றபடி சதோபிரதானமாக இருக்கிறார்களோ, அதே போல் இங்கேயும் ஒவ்வொரு முயற்சி செய்பவரும் பரிஷ்தா நிலையை அவசியம் பிராப்தி செய்கிறார். அப்படி இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் இப்பொழுது கடைசி ரியலைசேஷன் (உணரும்) பாடம் நடந்து கொண்டிருக்கிறது. ரியலைசேஷன் பாடத்தில் ஒவ்வொருவரும் தன்னைத் தானே எந்த அளவு ரியலைஸ் செய்திருக்கிறீர்கள்? அப்படி ரிசல்ட்டில் இரண்டு முக்கியமான விஷயங்களைப் பார்த்தோம். யாவை? அவை ஒவ்வொருவரும் எந்த பொசிஷன் (பதவி) வரை வந்தடைந்திருக்கிறார்கள்? ஆப்பொசிஷன் (எதிர்ப்பு) அதிகமாக இருக்கிறதா? அல்லது பொசிஷனின் நிலை அதிகமாக இருக்கிறதா? இன்னொன்று பழைய உடல் மற்றும் பழைய உலகத்திலிருந்து நினைவை எந்த அளவு டிரான்ஸ்ஃபர் (மாற்றம் செய்திருக்கிறார்கள்? கூடவே டிரான்ஸ்ஃபரின் ஆதாரத்தில் டிரான்ஸ்பெரன்ட்

(தெள்ளத்தெளிவான நிலை) எந்த அளவு ஆகியிருக்கிறார்கள்? நான்கு பாடங்களிலுமே எவ்வளவு நடைமுறை சொரூபமாக ஆகியிருக்கிறார்கள். பாப்தாதாவின் மூன்று சொரூபத்தின் -சாகாரம், ஆகாரம் மற்றும் நிராகாரம் மூலமாக பெற்ற பாலனை மற்றும் படிப்பின் நன்றிக் கடனை செலுத்துதல் எவ்வளவு செய்திருக்கிறார்கள்? தொடக்கத்திலிருந்து இதுவரை என்னென்ன பாப்தாதாவிடம் உறுதிமொழி செய்திருக்கிறார்களோ அந்த அனைத்து உறுதிமொழிகளைக் கடைப்பிடிக்கும் சொரூபமாக எந்த அளவு ஆகியிருக்கிறார்கள்? எந்த அளவு காய்தா (சட்டம்), அந்த அளவு ஃபாய்தா (லாபத்தை) எடுத்திருக்கிறாரா? இந்த மாதிரியான தன்னுடைய சோதனையை ஒவ்வொருவரும் செய்கிறீர்களா? நான்கு பாடங்களையும் சோதிப்பதற்கான சகஜ சாதனம் உங்களைப் பற்றி பாடிய மகிமை மூலம் நிரூபணம் ஆகி விடுகிறது. அந்த மகிமையை தெரிந்திருக்கிறீர்களா? அது எந்த மகிமை? அதன் மூலம் நான்கு பாடங்களையுமே சோதனை செய்ய முடியும்? அந்த மகிமையோ அனைவருக்கும் நினைவிருக்கிறது தான் இல்லையா? (அனைத்து குணங்கள் நிறைந்தவ... இந்த நான்கு விஷயங்களிலும் நான்கு பாடங்களின் ரிசல்ட் வந்து விடுகிறது. எனவே இந்த நான்கு விஷயங்களிலுமே சம்பன்னமாக ஆகியிருக்கிறேனா என்ற இதை சோதனை செய்யுங்கள். இதுவரையிலும் 16-கலைகள் உள்ளவனாக ஆகியிருக்கிறேனா அல்லது 14-கலைகள் வரை தான் வந்து சேர்ந்திருக்கிறேனா? அனைத்து குணங்களும் நிரம்பியவனாக ஆகியிருக்கிறேனா அல்லது குணம் நிரம்பியவனாக ஆகியிருக்கிறேனா அதாவது ஏதாவது குணத்தை தாரணை செய்திருக்கிறேனா? அனைத்து மரியாதைகளை தாரணை செய்து மரியாதா புருஷோத்தமன் ஆகியிருக்கிறேனா? சம்பூர்ண அஹிம்சை யானவனாக ஆகியிருக்கிறேனா? எண்ணம் மூலமாகவும் ஏதாவது ஆத்மாவிற்கு துக்கம் கொடுப்பது மற்றும் துக்கத்தைப் பெறுவது இதுவும் ஹிம்சை ஆகும். சம்பூர்ண அஹிம்சையானவர் என்றால் எண்ணம் மூலமாகவும் யாருக்கும் துக்கம் கொடுக்காதவர். புருஷோத்தமன் என்றால் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு அடியும் உத்தமமாக அதாவது சாதாரணமானதாக அன்றி உயர்ந்ததாக இருக்க வேண்டும். லௌகீகமானதாக இல்லாமல் மற்றும் வீணானதாக இல்லாமல் இருக்க வேண்டும். அந்த மாதிரி நான் எந்த அளவு ஆகியிருக்கிறேன்? பாப்தாதா

என்ன பார்த்தார்? இதுவரை முக்கியமாக இரண்டு சக்திகளின் மிக அவசியமாக இருக்கிறது. அவை யாவை?

ஒன்று தன்னை பகுத்தறியும் சக்தி, இன்னொன்று தன்னை பரிவர்த்தனை (மாற்றிக் கொள்ளும்) செய்யும் சக்தி. இந்த இரண்டு சக்திகளின் ரிசல்ட்டில் எவ்வளவு தீவிர முயற்சி செய்பவர், தீவிர வேகமாக முன்னேற விரும்புகிறார், அந்த அளவு முன்னேற முடிவதில்லை. இந்த இரண்டு சக்திகளின் குறையின் காரணமாகத்தான் ஏதாவது தடை வேகத்தை அதிகரிக்க விடுவதில்லை. மற்றவர்களைப் பகுத்தறியும் வேகம் அதிகமாக இருக்கிறது. மற்றவர்கள் பரிவர்த்தனை ஆக வேண்டும் என்ற இந்த எண்ணமும் தீவரமாக இருக்கிறது, இதில் முதலில் நீங்கள் என்ற பாடம் உறுதியாக இருக்கிறது. எங்கு முதலில் நான் என்று இருக்க வேண்டுமோ அங்கு முதலில் நீங்கள் என்றிருக்கிறது மற்றும் எங்கு முதலில் நீங்கள் என்று இருக்க வேண்டுமோ அங்கு முதலில் நான் என்றிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் வரதானத்தில் கிடைத்திருக்கும் மூன்றாவது கண் மூலமாக பாப்தாதா என்ன காரியம் கொடுத்திருக்கிறாரோ அந்தக் காரியத்தில் ஈடுபடுவதில்லை. மூன்றாவது கண்ணை ஆத்மாக்களைப் பார்ப்பதற்காக, ஆன்மீக உலகை பார்ப்பதற்காக மற்றும் புது உலகைப் பார்ப்பதற்காகக் கொடுத்திருக்கிறார். அதற்குப் பதிலாக உடலைப் பார்ப்பது பௌதீக உலகைப் பார்ப்பது என்ற இதைத் தான் யதார்த்தமாக காரியத்தில் ஈடுபடுத்த தெரியாது என்று கூறுவது. எனவே இப்பொழுது நேரத்தின் வேகத்தைத் தெரிந்து கொண்டு பரிவர்த்தனை சக்தியை தனக்காக ஈடுபடுத்துங்கள். நேரத்தின் பரிவர்த்தனையைப் பார்க்காதீர்கள் ஆனால் தன்னுடைய பரிவர்த்தனையை பாருங்கள். நேரத்தின் பரிவர்த்தனையின் காத்தலில் அனேகர் இருக்கிறார்கள். தன்னுடைய பரிவர்த்தனைக்காக குறைவாக யோசிக்கிறார்கள், ஆனால் நேரத்தின் பரிவர்த்தனைக்காக இது ஆக வேண்டும் என்று யோசிக்கிறீர்கள். நீங்கள் படைப்பவர் ஆவீர்கள் மற்றும் நேரம் உங்களுடைய படைப்பாகும். படைப்பவர் என்றால் தன்னுடைய மாற்றம் மூலம் படைப்பின் அதாவது நேரத்தின் மாற்றம் ஏற்பட வேண்டும். பரிவர்த்தனையின் ஆதாரனமானவர் சுயம் நீங்கள் ஆவீர்கள். நேரத்தின் முடிவு அதாவது இந்த பழைய உலகத்தின் மாற்றத்தின் கடிகாரம் நீங்கள் ஆவீர்கள். முழு உலகின்

# 1976 அவ்யக்த முரளி

ஆத்மாக்களுக்கு, எப்பொழுது இந்த கடிகாரங்கள் முடிவின் நேரத்தைக் காண்பிக்கும் என்று உங்கள் மேல் பார்வை இருக்கிறது. உங்கள் கடிகாரத்தில் எத்தனை மணி ஆகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் நேரத்தை சொல்பவர்களா அல்லது கேட்பவர்களா? காத்திருக்கிறீர்களா என்ன? நேரத்தைக் காண்பிப்பவர்களுக்கு நேரத்திற்காக ஏதாவது குழப்பம் இல்லையே? குழப்பம் இருக்கிறதா அல்லது ஆடாத அசையாத நிலையா? என்னவாகும், எப்பொழுது ஆகும், ஆகுமா அல்லது ஆகாதா, நாடகப்படி அவ்வப்பொழுது அசைக்கக்கூடிய பரீட்சைகள் வந்து கொண்டே இருக்கும், மேலும் வரவும் செய்யும்.

மரத்தை ஆட்டுகிறீர்கள் தான் இல்லையா? அப்படி நிச்சயம் என்ற வேரை அதாவது அஸ்திவாரத்தை அசைக்கும் சோதனைகளும் வரும். அப்பொழுது பரீட்சை எழுதுவதற்கு தயாராக இருக்கிறீர்களா அல்லது பலஹீனமானவர்களாக இருக்கிறீர்களா? பாண்டவ சேனை தயாராக இருக்கிறீர்களா அல்லது சக்திகள் தயாராக இருக்கிறீர்களா? அல்லது இருவருமே தயாராக இருக்கிறீர்களா? புத்திசாலி மாணவர்கள் பரீட்சை எப்பொழுது வரும் என்று ஆவாஹனம் செய்வார்கள். மேலும் பலஹீனமானவர்கள் பயப்படு வார்கள். அப்படியானால் நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? நிச்சயபுத்தியின் அடையாளம் என்பது அவர் ஒவ்வொரு விஷயம் மற்றும் ஒவ்வொரு காட்சியை நிச்சயமாகத் தெரிந்து எப்பொழுதும் கவலையற்று இருப்பார்கள். ஏன்,என்ன மற்றும் எப்படி என்ற கவலை இருக்காது. பரிஷ்தாவின் கடைசி நிலையின் அடையாளமானது எப்பொழுதும் நற்சிந்தனை உள்ளவர் மற்றும் எப்பொழுதும் கவலையற்றவர் என்பதாகும். அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? ரியலைசேஷன் பாடத்தில் தன்னை ரியலைஸ் செய்யுங்கள். மேலும் இப்பொழுது கடைசி முயற்சி செய்வதற்காக இருக்கும் கொஞ்ச நேரத்தில் தன்னுள் அனைத்து சக்தி களையும் பிரத்யக்ஷம் செய்யுங்கள்.

பிரத்யட்ச வருடத்தை கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா? தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கு முன்பு முதலில் தன்னுள் (உங்களுடைய மகிமையாக என்னென்ன கூறினோமோ) இந்த அனைத்து விஷயங்களையும் பிரத்யக்ஷம் செய்யுங்கள். அப்பொழுது

தான் தந்தையை பிரத்யக்ஷம் செய்ய முடியும். இந்த வருடம் விசேஷமாக ஜுவாலா சொரூபம் அதாவது லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலையைப் புரிந்து கொண்டு, இதே முயற்சியில் இருங்கள். முக்கியமாக நினைவு யாத்திரையை சக்திசாலியாக ஆக்குங்கள், ஞான சொரூபத்தின் அனுபவியாக ஆகுங்கள். அந்த மாதிரி தன்னுடைய முன்னேற்றத்திற்காக விசேஷமாக முயற்சியை தயாரியுங்கள். அதன் மூலமாக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய உள்உணர்வு மற்றும் நன்மை பயக்கும் உள்உணர்வு மேலும் சக்திசாலியான சூழல் மூலமாக அனேக துடித்துக் கொண்டிருக்கும், அலைந்து கொண்டிருக்கும் மற்றும் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஆனந்தம், அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் ஆகட்டும். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? சொல்வது மட்டுமின்றி அனுபவம் செய்விக்க வேண்டும், அனுபவம் செய்விப்பதற்காக முதலில் சுயம் நீங்கள் அனுபவம் நிறைந்தவராகுங்கள். தன்னை மாற்றம் செய்து உலகத்தைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும் என்ற விசேஷ எண்ணத்தை இந்த வருடத்திற்காக எடுங்கள். புரிந்ததா. திட எண்ணத்தின் ரிசல்ட்டாக எப்பொழுதும் வெற்றி தான் இருக்கும். நல்லது.

அந்த மாதிரி திட எண்ணம் மூலமாக உலகின் புது படைப்பை செய்யக்கூடிய, தன்னுடைய ஆன்மீக உள் உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்யக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுகம், சாந்தி மற்றும் சக்தியின் அஞ்சலி மற்றும் வரதானம் கொடுத்து திருப்தியான ஆத்மாவாக ஆக்கக்கூடிய, பல ஜென்மங்களாக தாகமாக இருக்கும் ஆத்மாக்களின் தாகத்தைத் தீர்க்கக் கூடிய, அனைவரையும் அவரவர்களின் புகலிடத்திற்கு சென்றடையச் செய்யக் கூடிய, எப்பொழுதும் நிச்சயபுத்தி உடைய, குழப்பத்திலும் ஆடாதவராக இருக்கக்கூடிய, ஞான சொரூபம் மற்றும் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 07.02.1976-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகாரதிகளின் ஒன்றும் புதிதல்ல என்ற நிலை மற்றும் வீணானவைகளின் கணக்கின் முடிவு!

மகாரதிகளின் விசேஷ அடையாளமாக என்னவாக இருக்கும், அதன் மூலம் இது மகாரதி நிலையின் முயற்சி என்று தெளிவாகி விடும்? ஒன்றோ மகான் முயற்சி செய்பவர் அதாவது மகாரதி. என்னென்ன காட்சிகளைப் பார்ப்பாரோ அதை நாடகத் திட்டப்படி அனேக தடவை நடந்தது, இப்பொழுது மீண்டும் அதே போல் நடந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்வார். மேலும் அது அவருக்கு ஒன்றும் புதிதல்ல என்று அனுபவம் ஆகும். எந்த புது விஷயமும் அதன் மூலம் ஏன், என்ன என்ற கேள்வி எழும் மாதிரி அனுபவம் ஆகாது. மேலும் இன்னொன்று எப்படி நடைமுறையில், நினைவு சொரூபத்தில் அனேக தடவை பார்த்த காட்சி இப்பொழுது அதே போல் நடந்து கொண்டிருக்கிறது என்று அனுபவம் ஆகும். எந்தவொரு புது விஷயத்தையும் செய்யவில்லை, ஆனால் நடந்ததை மீண்டும் அதே போல் செய்து கொண்டிருக்கிறேன். நினைவில் கொண்டு வர வேண்டியதாக இருக்காது. கல்பத்திற்கு முன்பு என்ன நடந்ததோ அதே இப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது ஆனால் எப்படி ஒரு விநாடி முன்பு நடந்த விஷயம் மிகத் தெளிவான ரூபத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது எப்படி ஒரு விநாடிக்கு முன்பு நடந்த காட்சி நினைவிலிருக்கிறதோ அதே போல் அந்த சென்ற கல்பத்தின் காட்சி அதே போலவே நினைவிருக்கும். ஏனென்றால் ஒன்று பார்வையாளர் நிலை, இன்னொன்று மூன்று காலத்தையும் தெரிந்த நிலை. இந்த இரண்டு நிலைகளும் மகாரதிகளுக்கு இருக்கும் காரணத்தினால் சென்ற கல்பத்தின் நினைவு முற்றிலும் பசுமையானதாக இருக்கும். எனவே ஒன்றும் புதிதல்ல மற்றும் வேறு என்னவாக இருக்கும்?

எந்த எப்படிப்பட்ட கோரமான சூழ்நிலையாக இருந்தாலும் அல்லது மிகப் பெரிய ரூபத்தின் பிரச்சனையாக இருந்தாலும் ஆனால் தன்னுடைய நிலை உயர்ந்ததாக இருக்கும் காரணத்தினால் அது முற்றிலுமே சிறியதாக அனுபவம் ஆகும். பெரிய விஷயமாகவும், கொடூரமானதாகவும் அனுபவம் ஆகாது. எப்படி உயர்ந்த மலை மேல் நின்று கொண்டு கீழே உள்ள ஏதாவது பொருளை பார்த்தீர்கள் என்றால் பெரிய பொருளும் கூட சிறியதாகத் தென்படும். மிகப் பெரிய தொழிற்சாலைக் கூட ஒரு சிறிய மாடல் ரூபத்தில் தென்படும். இதைப் போல் மகாரதியின் மகான் முயற்சியின் எதிரிலே அவருக்கு எதுவுமே பெரிய விஷயமாக அனுபவம் ஆகாது. அப்படி மகாவீர் என்றால் மகாரதியின் மகான் முயற்சி செய்வதின் இந்த இரண்டு அடையாளங்கள் இருக்கின்றன. இதை வேறு வார்த்தைகளில் "ஈட்டியாக இருப்பது முள்ளாக அனுபவம் ஆகும்" என்று கூறப்படுகிறது. அந்த மாதிரியான மகாவீரின் வாயிலிருந்து என்ன நடக்கப்போகுமோ அதே வார்த்தைகளே எப்பொழுதும் வெளியாகும். என்ன நடக்க வேண்டியதாக இருக்குமோ அவை தான் அவர் வாயிலிருந்து வெளியாகும். இதைத் தான் சித்தி சொரூபம் என்று கூறுவது. என்ன வார்த்தை வெளியாகுமோ, என்ன காரியம் நடக்குமோ அது வெற்றி அடைபவைகளாக இருக்கும். வீணானவைகளாக இருக்காது. மகாரதிகளின் அடையாளமாவது பாவக்கணக்கோ முடிவடைந்தே இருக்கும் ஆனால் வீணானதின் கணக்கும் முடிவடைந்து இருக்கும். அவர் மாஸ்டர் சர்வ சக்திவான் தான் இல்லையா? அப்படி மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையின் நடைமுறை சொரூபம், பாவக்கணக்கின் கூடவே வீணானவற்றின் கணக்கும் முடிவடைந்து இருக்கும். இது தான் மகாரதிகள் செய்யும் முயற்சியின் அடையாளமாகும். பார்வையால் நன்மை செய்யும் சேவையை தொடங்கி விட்டீர்களா? ஒன்று மகாதானி, இன்னொன்று வரதானி மற்றும் மூன்றாவது விஷ்வ கல்யாணி (உலகத்திற்கு நன்மை செய்பவர்). இந்த மூன்று விசேஷங்களுமே ஒருவரிலேயே இருக்கிறதா அல்லது சில விசேஷம் சிலரிலும் மற்றும் வேறு சில, வேறு சிலரிலும் இருக்கிறதா? சிலருக்கு வரதானி ரூபத்தில் பூஜை நடக்கிறது மற்றும் சிலருக்கு விஷ்வ கல்யாணியின் ரூபத்தில் பூஜை நடக்கிறது. பூஜையிலும் மற்றும் மகிமையிலும் ஏன் வித்தியாசம் இருக்கிறது? மூன்று விசேஷங்களும் உள்ளவராகத் தான் இருப்பார் ஆனால் சதவிகிதத்தில் வித்தியாசம் இருக்கும். சிலரில் சில

விஷயத்தின் மற்றும் வேறு சிலரில் வேறு விஷயத்தின் சதவிகிதம் குறைவாக அல்லது அதிகமாக இருக்கும். ஒன்று கர்மத்தின் விளைவு இரண்டாவது பிராப்தியின் விளைவு மற்றும் மூன்றாவது பூஜை, மகிமையின் விளைவு. எப்படி கர்மத்தின் விளைவு ஆழமானதோ அப்படி இந்த இரண்டின் விளைவுகளும் ஆழமானது தான். பிராப்தியின் சாட்சாத்காரமும் நடைமுறையில் இப்பொழுது இருக்கத் தான் வேண்டும் இல்லையா? யார் என்னவாக ஆவார் மற்றும் ஏன் ஆவார், எதன் ஆதாரத்தில் ஆவார்? இவை அனைத்தும் தெளிவாகும். விரும்பாவிட்டாலும் கூட, நினைக்காவிட்டாலும் கூட அவருடைய செயல், சேவை, நடத்தை, மனநிலை, தொடர்பு மற்றும் சம்மந்தம் தானாகவே அந்த மாதிரி யாகவேத் தான் இருக்கும். அதன் மூலம் யார் என்னவாகப் போகிறவர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நடத்தை அதாவது அவர் செய்யும் செயலே அவருடைய கண்ணாடியாக ஆகி விடும். செய்யும் காரியத்தில் மற்றும் கண்ணாடியில் ஒவ்வொருவரினுடையதும் தெளிவாக காட்சிகள் தெரிந்து கொண்டே இருக்கும். நல்லது. ஓம் சாந்தி

**வரதானம்: கட்டளைப்படி நடப்பவராக ஆகி தந்தையின் உதவி மற்றும் ஆசீர்வாதங்களை அனுபவம் செய்யக்கூடிய வெற்றி அடைபவர் ஆகுக!**

என் ஒருவனை நினைவு செய்யுங்கள் என்பது தந்தையின் கட்டளை ஆகும். ஒரு தந்தை தான் உலகம் ஆகும். எனவே உள்ளத்தில் ஒரு தந்தையைத் தவிர வேறு எதுவும் நிரம்பியிருக்க வேண்டாம். ரு வழி, ஒரு பலம், ஒரு நம்பிக்கை எங்கு ஒன்று இருக்கிறதோ அங்கு ஒவ்வொரு காரியத்தில் வெற்றி இருக்கிறது. அவரைப் பொறுத்தவரை எந்தவொரு சூழ்நிலையையும் கடந்து செல்வது சுலபமாக இருக்கும். கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு தந்தையின் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது. எனவே கடினம் கூட சுலபம் ஆகி விடுகிறது.

**சுலோகன்: புதிய பிராமண வாழ்க்கையின் நினைவில் இருந்தீர்கள் என்றால், எந்தவொரு பழைய சம்ஸ்காரமும் வெளிப்பட முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 08.02.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கனெக்ஷன் (தொடர்பு) மற்றும் கரெக்ஷனின் (சரி செய்தலின்) சமநிலை மூலம் அதிசயம்! (டீச்சர்களுடன்)

டீச்சர்களுக்கு விசேஷமாக இரண்டு விஷயங்களின் கவனம் வைக்க வேண்டும். அந்த இரண்டு விஷயங்கள் எவை? மதுபனுடன், தந்தையுடன் மற்றும் தெய்வீக பரிவாரத்துடன் மரியாதைப்பூர்வமான கனெக்ஷன் அதாவது தொடர்பு இருக்க வேண்டும். மரியாதைப்பூர்வமான கனெக்ஷன் என்றால் என்னென்ன எண்ணங்கள் மற்றும் காரியங்கள் செய்கிறீர்களோ அதை ஒவ்வொரு நேரமும் கரெக்ஷன் (சரி செய்தல்) செய்வதின் பயிற்சி உடையவராக இருக்க வேண்டும். இரண்டு விஷயங்கள் -ஒன்று சரியான கனெக்ஷன் மற்றும் இன்னொன்று ஒவ்வொரு நேரமும் தன்னுடைய ஒவ்வொரு கரெக்ஷன் செய்வதிலும் கவனம். ஒருவேளை இரண்டு விஷயங்களிலும் ஏதாவது ஒரு விஷயத்தின் குறை இருந்தாலும் வெற்றி அடைபவராக ஆக முடியாது. கரெக்ஷன் செய்வதற்காக எப்பொழுதும் சாட்சியாக இருக்கும் நிலை தேவையாக இருக்கிறது. ஒருவேளை சாட்சியாக இருந்து கரெக்ஷன் செய்யவில்லை என்றால் யதார்த்த கனெக்ஷன் வைக்க முடியாது. எனவே ஒவ்வொரு விஷயத்தில் ஒவ்வொரு நேரமும் கரெக்ஷன் செய்கிறேனா என்று இதை சோதனை செய்யுங்கள். ஒன்று புத்தியின் கரெக்ஷன், அதைத் தான் நினைவின் யாத்திரை என்று கூறுகிறீர்கள், இரண்டாவது ஸ்தூல காரியத்தில் வந்து கொண்டும், சாகார பரிவாரம் மற்றும் சாகார சம்மந்தத்தின் கனெக்ஷனில் வருவது, இரண்டு கனெக்ஷனும் சரியாக இருக்க வேண்டும். சாகாரத்தில் கனெக்ஷனில் வருவதில் மரியாதைப் பூர்வமாக இருக்க வேண்டும். ஒருவேளை ஆன்மீகப் பரிவாரத்தின் கனெக்ஷன் ஆன்மீகத்திற்குப் பதிலாக ஒருவேளை தேக அபிமானத்தின் கனெக்ஷன் இருக்கிறது என்றால் அதுவும் யதார்த்த கனெக்ஷனாக ஆகவில்லை.

யார் கரெக்ஷன் மற்றும் கனெக்ஷன் செய்யத் தெரிந்திருக்கிறாரோ அவர் எப்பொழுதும் ஆன்மீக போதையில் இருப்பார். அவருக்கு விலகியிருக்கும் நிலை மற்றும் அன்பாக இருக்கும் நிலையின் சமநிலை இருக்கும். பாருங்கள், எப்படி சமநிலையின் விளையாட்டை காண்பிப்பதற்காக சம்பாதிப்பதற்கான சாதனம் எவ்வளவு உருவாக்கியிருக்கிறார்கள் -அது தான் சர்க்கஸ். சமநிலையை அதிசய ரூபத்தில் காண்பிக்கிறார்கள் என்றால் இங்கேயும் ஒருவேளை சமநிலை இருக்கிறது என்றால் அதிசயமும் ஏற்படும் மற்றும் சம்பாத்தியமும் ஏற்படும். ஒருவேளை கொஞ்சமாவது குறைவாக அல்லது அதிகமாக ஆகி விட்டது என்றால் அதிசயமும் ஏற்படுவதில்லை, வருமானமும் ஏற்படுவதில்லை. எப்படி ஏதாவது உணவு பலகாரம் செய்கிறார்கள், ஒருவேளை அதில் அனைத்து பொருட்களின் சமநிலை இல்லை என்றால் எவ்வளவு தான் நல்ல பொருளாக இருந்தும் அதில் சுவை இருக்காது. அப்படி தன்னுடைய வாழ்க்கையையும் உயர்ந்ததாக மற்றும் வெற்றிகரமாக ஆக்குவதற்காக சமநிலை வையுங்கள்.

இன்னொரு விஷயம் -எப்படி பிரச்சனையோ, எப்படி நேரமோ அப்படி தன்னுடைய சக்திசாலியான நிலையை உருவாக்க முடிய வேண்டியதிருக்கும். ஒருவேளை சூழ்நிலை எதிர்க்கக்கூடியதாக இருக்கிறது என்றால் எதிர்கொள்ளும் சக்தியின் சொரூபமாக ஆகி விடுங்கள். ஒருவேளை சூழ்நிலை சகித்துக் கொள்வதற் கானதாக இருக்கிறது என்றால் சகித்துக் கொள்ளும் சக்தியின் சொரூபமாக ஆகி விடுங்கள் -அந்த மாதிரியான பயிற்சி இருக்க வேண்டும். டீச்சர்கள் என்றாலே சமநிலை. எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை தாரணை செய்வதற்கான சக்தி இருக்கட்டும். அன்பிற்குப் பதிலாக ஒருவேளை சக்தியை தாரணை செய்கிறீர்கள் மற்றும் சக்திக்கு பதிலாக ஒருவேளை அன்பை தாரணை செய்கிறீர்கள் என்றால் இதை என்னவென்று கூறுவது? அதாவது எப்படி நேரமோ அப்படி சொரூபத்தை தாரணை செய்யும் சக்தி இல்லை. எனவே சேவையின் ரிசல்ட்டும் வருவதில்லை. மேலும் வெற்றியும் அடைவதில்லை. ஒருவேளை நம்பர் ஒன் டீச்சராக ஆக வேண்டும் என்றால் எந்தவொரு தாரணையையும் முதலில் தாங்கள் செய்யுங்கள், பின்பு மற்றவர்களுக்குக் கூறுங்கள். தான்

செய்வதில்லை, ஆனால் மற்றவர்களுக்கு மட்டும் கூறுகிறீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். மற்றவர்களுக்கு என்ன டைரக்ஷன் கொடுக்கிறீர்களோ அதை முதலில் தன்னுள் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். சகித்துக் கொள்பவராக ஆகுங்கள் என்று மற்றவர் களுக்குக் கூறுகிறீர்கள் மற்றும் நீங்களே அப்படி இல்லை என்றால் அவர் டீச்சர் அல்ல. டீச்சர் என்றாலே ஆசிரியர் அதாவது படிப்பைக் கொடுப்பவர். ஒருவேளை தானே அந்த படிப்பின் சொரூபமாக இல்லை என்றால் அவரை யதார்த்த டீச்சர் என்று கூற முடியாது. ஆசிரியர் என்றால் கல்வி சொரூபம் மற்றும் சமநிலை வைப்பவர் என்ற இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது தரமுள்ள டீச்சராக ஆக வேண்டும். அதிக அளவின் மேல் உங்களுடைய பார்வை செல்ல வேண்டாம். தரமுள்ளவர் தான் அனைவரின் நன்மைக்கு பொறுப்பானவர் ஆக முடியும். எனவே இப்பொழுது டீச்சரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதில்லை ஆனால் தரத்தை அதிகரிக்க வேண்டும். புரிந்ததா?

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳✳✳✳

## 09.02.1976 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்து ரூப ஸ்திதி மூலம் பிராப்தி!

சேவாதாரி குரூப்'ஐ அறிமுகம் செய்யும்போது கூறப்பட்டவை, கேள்வி-பதில் ஆக:

**கேள்வி: அனைத்து பாய்ன்டுகளின் (விஷயங்களின்) சாரமாக ஒரு வார்த்தையில் கூறுங்கள்?**
பதில்: பாய்ண்டுகளின் சாரம் -பாய்ன்ட் ரூபம் அதாவது புள்ளி ரூபம் ஆகி விடுவது.

**கேள்வி: புள்ளி ரூப நிலை ஆவதினால் எந்த இரட்டை பிராப்தி ஆகிறது?**
பதில்: புள்ளி ரூபம் என்றால் சக்திசாலியான நிலை அதில் வீணான எண்ணம் ஓடுவதில்லை மற்றும் புள்ளி என்றால் கடந்ததை கடந்ததாக்குவது. இதன் மூலம் காரியமும் உயர்ந்ததாக இருக்கும் மற்றும் வீணான எண்ணம் இல்லாத காரணத்தினால் முயற்சி செய்வதின் வேகமும் அதிகமாக இருக்கும். எனவே கடந்ததை கடந்ததாக ஆக்குங்கள். வீணானதைப் பார்ப்பது, கேட்பது மற்றும் பேசுவது அனைத்தும் முடிவடைந்து விட வேண்டும். சக்திசாலியான கண்கள் திறந்திருக்கட்டும் அதாவது பார்வையாளர் நிலையில் இருங்கள்.

**கேள்வி: தாமரை மலருக்குச் சமமாக ஆவதற்கான யுக்தி என்ன?**
பதில்: யாருடைய குறையைப் பார்த்தும் அவருடைய சூழலின் பிரபாவத்தில் வர வேண்டாம். இதற்காக அந்த ஆத்மா மீது இரக்கம் நிறைந்த பார்வை மற்றும் உள்உணர்வு இருக்கட்டும். எதிர்நோக்குவதாக இல்லாமல் அதாவது இந்த ஆத்மா தவறின் பரவசத்தில் இருக்கிறார். இவர் மேல் குறை ஒன்றும் இல்லை. இந்த மாதிரி எண்ணம் வைப்பதினால் அந்த சூழலின் மற்றும் விஷயத்தின்

பிரபாவம் ஆத்மா உங்கள் மேல் ஏற்படாது. இதைத் தான் தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பது என்று கூறப்படுகிறது.

கேள்வி: வெற்றி அடைபவராக ஆவதற்காக என்ன செய்ய வேண்டும்?
பதில்: பழிக்குப்பழி வாங்கக்கூடாது. மாறாக தன்னை மாற்ற வேண்டும். மகாவீர் ஆக வேண்டும். மல்யுத்தம் செய்யக்கூடாது. மல்யுத்தம் செய்வது என்றால் ஒருவேளை யாராவது ஏதாவது விஷயம் கூறினார் என்றால், அவரைப் பற்றி இவர் என்ன செய்தார். இவர் ஏன் கூறினார் என்று எண்ணம் ஓட ஆரம்பிக்கும். இதைத் தான் மனதால் மற்றும் வார்த்தைகளால் மல்யுத்தம் செய்வது என்று கூறுவது. வணங்குவது என்றால் தலைவணங்குவது, எப்பொழுது வணங்குவீர்களோ அப்பொழுது தான் வணங்கப்படுவீர்கள். நானோ எப்பொழுதுமே வளைந்து கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறேன். எனக்கு ஒரு மரியாதையும் இல்லை மற்றும் யார் வளைந்து கொடுப்பதில்லையோ மற்றும் பொய் கூறுகிறாரோ அவருக்குத் தான் மரியாதை இருக்கிறது என்று அப்படி நினைக்காதீர்கள். இது அற்பகாலத்திற்கானது ஆனால் தொலைநோக்கு புத்தியை வையுங்கள். இங்கு எத்தனை பேர் முன்னால் வளைந்து கொடுப்பீர்களோ அதாவது பணிவு என்ற குணத்தை தாரணை செய்வீர்கள் என்றால் முழு கல்பமுமே அனைத்து ஆத்மாக்களும் என் எதிரில் வந்து நமன் செய்வார்கள். சத்யுகம், திரேதாயுகத்தில் இராஜா என்ற மரியாதையின் காரணமாக தலையால் அன்றி ஆனால் மனதால் வணங்குவார்கள் மற்றும் துவாபர, கலியுகத்தில் தலை வணங்குவார்கள். நல்லது.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்